அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல் எம்.எல்.ஏ.

1963

ஜனவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

பிப்ரவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28		

மார்ச்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

ஏப்ரல்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

மே

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

ஜூன்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

ஜூலை

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

ஆகஸ்டு

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

செப்டம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

நவம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

1963

எழுச்சி பொங்குக!

அன்பு நாற்று நட்டு
ஆர்வ நீர் பாய்ச்சி
துன்பக் களையெடுத்து
இன்பத்தை அறுத்தெடுக்கும்
எழில் நாள், தமிழர் திருநாள்!

இன்று,

எண்ணமெல்லாம் பொங்குக,
உள்ளமெல்லாம் பொங்குக,
முயற்சியெல்லாம் பொங்குக,
முறியடிப்போம் சீனரை !!

என்று

பொங்கட்டும் எழுச்சி,
பொங்கட்டும் பால்,
பொங்கலோ பொங்கல்!

தாயகத்தோரே ! எனது வணக்கங்கள் உங்கள் இல்லங்களுக்கு !

சிவாஜி ரிலீஸ்

ராயப்பேட்டை + சென்னை.14

சிவாஜி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட்.

அறப்போர்

ஒளி 2 : : 11-1-63 வெள்ளி கதிர்-44



உடன் பிறப்புகளே!

உங்கள் இல்லங்களுக்குளனது அன்பான வணக்கங்கள்.

சோதனை மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கும்இந்த நேரத்தில் சோதனையைக் கொஞ்ச நேரம் மறந்து விழா எடுக்கின்றோம்.

'இந்தாங்க, பொங்கல்!' எனும் அன்பு மனைவியின் அகமும், 'அப்பா, கரும்பு!' என்று சொல்லும் குழந்தைச் செல்வங்களின் குதூகலமும், 'தம்பீ, வாடா!' என்றழைக்கும் தாய் தந்தையரின் களிப்பு முகமும் நம் கவலைகளையெல்லாம், விரட்டியடிக்கும் இன்பநாள்! எழில்நாள்! இந்நாள்!

"வரப்போகும் ஆண்டுகள் அச்சத்தையும் துக்கத்தையும்அளிக்குமோ?" என்கிற போர்க்குரல் எங்கும் இன்று பொங்குகின்றன! அலைகள் சுருண்டெழுந்தாலும், சுருக்கள் வாய் பிளந்தாலும், குறித்த இடத்துக்குக் கல போய்ச் சேரத் தானே வேண்டும்? வாழ்க்கையும் அப்படித் தானே!!

நமது உள்ளம் அன்பால் மலர்ந்தது. பண்பால் உயர்வது, நமக்கு அதனை உணர்த்தியவர் திருவள்ளுவர்—அவர் கோட்பாடுகளைச் செயல்படுத்திச் சிறப்பெய்தியவர் காந்தியடிகள்—இரண்டின் சின்னமாக யிருப்பவர் நமது அண்ணா!

அண்ணாவின் தலைமையில் எதையும் வெல்வோம் என்கிற நமபிக்கை நமக்குண்டு. அதற்கென வளர்ந்துள்ள நமது அணியும் சாதாரணமானதல்ல! என்ருளும் பொங்கலிடும் இவ்வேளையில் பொற்செழியன், கோ. சு. மணியின் குடும்பங்களிலேபொங்கும் கண்ணீரை நாம் எண்ணுமலிருக்க முடியுமா? அந்த இரு வீரர்களின் உருவங்களுக்குநமது அஞ்சலிகள்!

அறப்போர் மறியலிலே ஈடுபட்டு சிறைமீண்டு, வந்ததும் போர்ப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு தன்மதிப்பையும் 'நாட்டு வாழ்வில் அக்கறையுள்ளவர்களப்பா, இவர்கள்!' என்கிற பெருமையையும் பெற்றிருக்கிறோம்.

பலவகையிலும் இது நமக்கோர் தியாகப் பொங்கல்! நமது தியாகிகளுக்கு இருவண்ணக் கொடியின் கீழ்நின்று எனது மரியாதைகளைச் செலுத்திக் கொண்டு அளவிலும் உருவிலும் சிறிய இம்மலரைச் சுவைக்க உங்களை அழைக்கின்றேன்! பொங்கல் உழைப்புத் திருநாள். உழைப்போம்! உழைப்பு மட்டுமிருந்தால் சீனரையென்ன எவரையுமே வெல்லலாம். அதைவிட இன்று நாம் எடுத்துக் கொள்ளும் உறுதி யென்ன இருக்கிறது?

அன்பன்

அரங்கண்ணல்

"அன்புருவே! எங்கள் அண்ணனே! தாயகத்தின் சின்னமே! தங்கட்கு, எங்கள் வணக்கமும் வாழ்த்தும்.

'அறப்போர்' அலுவலகத்தார்



காடு வெட்டி கழனியாக்கி
மேடு பள்ளம் சீராக்கி
வீட்டை மறந்து, காட்டி
லும் கடும்பனியிலும்
உழைத்து உழைத்து தன்
னை ஓடாக்கிக் கொண்டு,
இந்த உலகை வாழவைக்
கின்ற உழவன் சிரிக்கின்ற
நாள்...பொங்கல்

அண்ணா

ஹிட்லர் பாதை !

''மாவீரன் சீசர் வீராதி வீரன்! வெஞ்சமர்களைப் புரிந்தவன் ஆனால் அவனுக்கு மகனைப் போர்க் களத்தில் பறிகொடுத்தத் தாயுடைய கண்ணீர் தெரிந்திருக்காது, அப்படி அவன் கண்ணீரைப்பற்றிக் கவலைப்பட்டிருந்தால் வீரனாகியிருக்க முடியாதென்று எதிர் தரப்பு வக்கீல் கூறியதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

கண்ணீரைப் பற்றி உருக்கமான உள்ளம் கொண்டவர்களால்தான் உணரமுடியும். அவர்களால்தான் அடுத்தவன் படுகிற துயரத்தைப் புரிந்துகொள்ள இயலும். கருங்கல் மனம் கொண்டவன் கரைய மாட்டான், கதற மாட்டான்.

நீதியின் முன்னே நிறுத்தப்படுகிறபோது தன்னுடைய நீலித்தனத்தாலும் பொய்களாலும் தப்பவே முயல்வான்.

கொலைபாதகங்களைப் புரிந்து விட்டுஇதோநிற்கிறானே ஈச்மென் இவனுடைய குருநாதர் ஹிட்லருடைய பொன் மொழி 'பொய்யைப் பல தடவைச் சொல்லுங்கள். பொய்யே பிறகு உண்மையாகி விடும்'' என்பதாகும்!! யூதர்கள் வேறு, ஆரிய இனம் வேறு என்பது நாஜிகளின் சித்தாந்தமாகும்

வாழ்ந்த இனமான ஆரியம்,புதிய வாழ்க்கைபெற்றயூதர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் விட்டுக் கொடுத்து விட்டது என்பதைப் பறிகொடுத்தோர்! பவிசு பெற்றோர்!! என்று 'இரண்டு உலகங்களுக்' கிடையே உண்டானப் போராட்டம் என்றார் எதிர்க்கட்சி வக்கீல். இப்படிப்பட்ட 'வெறி'யால்தான் நாஜிசம் உருவாகி 60 இலட்சம் யூதர்களைக் கொல்லுகின்ற ஈச்மென் போன்றவர்களை வளர்த்திருக்கிறது! அவர் சொற்படி பார்த்தால், இரண்டு உலகங்கள், இங்கே இப்போது நீதிமன்றத்தில் சந்திக்கின்றன என்றார்.

உண்மையே! 'தான்' என்ற மமதை கொண்ட சர்வாதிகாரியின் உலகம் ஹிட்லருடையது. அவர் பெற்றிருந்த அதிகாரம் மலையுச்சியிலே பலருக்கு ஒளிவீச வைக்கப்பட்ட விளக்கல்ல, விரோதமும் பாழ்மனமும் கொண்டஅதள பாதாளமாகும். அந்த ஹிட்லரால் படுகொலைக்காளான எங்கள் உலகம், பொறுமையைப் பூணாரமாகக் கொண்டது, துயரங்களிலே உருவானது, பல துன்ப சாகரங்களைத் தாண்டியது. நாங்கள் எப்போது பார்த்தாலும் துன்பங்களிலும் தொல்லைகளிலும் மிதந்தாலும் யூதர்களாகிய எங்கள் உலகின் இருதயம் மலையளவுக்குப் பெரிது! உயர்ந்தது!!''

*

ஈச்மென் வழக்கு அனைவருக்கும் தெரியும்.ஹிட்லருடைய சகாவான இவனுடைய வக்கீல், ஒரு புதிய விளக்கம் சொன்னார். யூத மக்களுடைய வாழ்க்கை தங்களைவிட மேம்பட்டதாக இருந்ததைக் கண்டு சகிக்கமுடியாமல்தான் 'நாஜிசம்' உருவானதாகக் கூறினார். ஓரளவுக்கு உண்மைதான்! ஜெர்மனியில் எங்கிருந்தோ வந்த யூதர்கள் வட்டிக்கடை மகிபர்களாகவும் வாரி வழங்கும் வள்ளல்களாகவும் இருந்தார்கள். ஏழை ஜெர்மனியன் இதைக்கண்டுப் பொருமினான். அதனை எண்ணெய் கொட்டி வளர்த்து, தலைவனானான் ஹிட்லர்!!

வெறுப்பிலே உருவான ஹிட்லர், ஜெர்மனியின் சர்வாதிகாரியான பிறகும், ஒரு யூதன்கூட ஜெர்மனியில் இருக்கலாகாது என்று ஆசைப்பட்டு அவர்களை விரட்டச் சட்டமும் போட்டான்! அதோடு வெறுப்பு நிற்கவில்லை! தன்னுடைய ஆரிய பூர்வீகத்துக்கு எதிரானது யூதயினம். யூதர்களிலே ஒருவன்தான் இயேசுநாதரைக் காட்டிக் கொடுத்தான். அப்படிப்பட்ட இனமே உலகத்திலே இல்லாவிட்டால் என்ன?— என்று கேட்டான். அவன் கேள்வியின் எதிரொலியாக யூதர்களை ஒழிப்பதற்கென்றே ஒரு இலாகா உருவாக்கப்பட்டு அதன் தலைவனாக ஈச்மென இருந்தான்.

தன் இலாகாவின் பணியைத் திறம்படச் செய்ய 'மனிதர்களைச் சுலபமாகக் கொல்லும்'வழிகளைக் கண்டுபிடித்தான்.

குழந்தைகள், குலமகளிர் வயோதிகர், வாலிபர் அனைவரையும் லாரிகளில் ஏற்றி, அந்த லாரிக்குள் விஷ வாயுவைப் புகுத்தி, [illegible]க்களைக் கூட்டித் தள்ளுவது போல் பள்ளங்களில் கொண்டு போய்க் கொட்டினான்! அந்தப் பயங்கரத்தை 'அறப்போர்' வாசகர்கள் அறிவர்!!

''நம்மைவிட அவர்கள் கட்சி வளர்கிறதே! அந்தக் கட்சியிலிருக்கிறவர்கள் நம்மைவிட நன்றாகப் பேசுகிறார்களே! அவர்களுக்கு நம்மைவிடச் செல்வாக்கு வளர்கிறதே!!'' என்கிற எண்ணம் இங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்பட்டு அது வளர வளர அசூயையாகி இன்று வெறுப்பாக வளர்ந்து, அந்த வெறுப்பு 'தி.மு.க, காரர்களெல்லாம் ஒழியமாட்டார்களா?' என்கிற அளவுக்கு இன்றைய தினம் வெறியாக வளர்ந்திருக்கிறது!!

அந்த வெறியின் விளைவால் 'இங்கே ஒரு ஈச்மென் இல்லையே!' என்று வருந்துகின்ற அகிம்சா மூர்த்திகள் கூட இருக்கிறார்கள்!! அதனால்தான் காமராசர் போன்றோர் தம்முடைய கண்ணியத்தையும்கூட மூட்டைகட்டி வைத்துவிட்டு, மூர்க்கத்தனமான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட 'வெறுப்பு' எங்கே கொண்டுபோய் விடும் என்பதை எண்ண வேண்டும்! நாம் சீமான்களல்ல,ஆனால் சிந்தனைச் செல்வம் பெற்றவர்கள். அதே போல சிந்தனைச் சிற்பிகளாகவும் செயல் வீரர்களாகவும் ஆகட்டுமே காங்கிரஸ்காரர்கள்! விடமாட்டோம் என்று அணையா போட்டு வைத்திருக்கிறோம் நாம்? ரோஜாத் தோட்டம் ஒன்றிருந்தால் மல்லிகைத் தோட்டம் வைத்து ஊரை நல்லதாக்குவதுதானே! அதைவிட்டு, ரோஜாத் தோட்டம் அழியவேண்டும் நானும் மல்லிகைத் தோட்டம் வைக்க மாட்டேன், மாறாக என் கள்ளிச் செடிதான் ஊரெங்கும் இருக்க வேண்டும் என்பது போலத்தானிருக்கிறது இங்குள்ள காங்கிரசார் போக்கு!!

அதனால்தான் அடாவடி வழிகளையும் ஆத்திர விழிகளையுமே தங்களது மனிதப்பண்பாக மாற்றிக் கொண்டு வருகிறார்கள். சந்து பொந்துகளில் நுழைந்தாவது நம்மையெல்லாம் ஒழிக்க வேண்டும் என்று முயல்கிறார்கள்.

இதுதான் ஈச்மென் பாதை ஹிட்லர் பாதை!! இந்தப் பாதையில் போன ஹிட்லர் உலகையே கலக்கிய சர்வாதிகாரியாக ஒரு போது இருந்தான் என்பது உண்மை! ஆனால் இப்போது உலகத்தில் அவனுக்கு ஒரு சமாதிகூட இல்லை!

ஈச்மென் பெயரைக் கேட்டால் யூத உலகமே மிரண்டது, ஒரு போது. அந்த ஈச்மென் 'அநாதையாக'த் தூக்கில் தூங்கிச் செத்தான்

இதை மறந்துவிடக்கூடாது,இப்போது 'ஹிட்லர் பாதை' வகுக்க இங்கே முயற்சிக்கிறவர்கள்!

—ஃ—

ஈச்மென்

சீரழிந்து கிடந்த ரஷ்யச் சமுதாயத்தை உருவாக்கியவர்களில் இலக்கிய மேதைகளின் பணி நிரம்ப!

முக்கியமான மூவரின் சில கதைகளை இங்கே சுருக்கமாக தருகிறார் தோழர் ப. வாணன் அவர்கள்

இவ்ஜினி ஒனிஜின்

புஷ்கின்

'இவ்ஜினி ஒனிஜின்' பிரபுக்களின் வம்சத்தில் பிறந்தவன். ஒனிஜின், பிரபுக்களுக்குள்ள ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும்போது அவனுடைய தந்தை நிறைய கடனை வைத்துவிட்டு இறந்துவிடுகிறான். கடன்பட்ட ஒனிஜின் வாழத் தெரியாமல் திண்டாடுகிறான். நல்ல வேளையாக இதே நேரத்தில் அவன் மாமன் ஒருவன் அவனுக்கு ஏராளமான சொத்தை எழுதிவைத்து விட்டுஇறந்து விடுகிறான். ஒனிஜினுக்கு மறுபடியும் உயிர் வருகிறது. கடன் அடைக்கப்பட்டு மீண்டும் பிரபுவாகிறான். அவனுடைய மாமன் கிராமத்திற்கு சென்று சொத்தை யேற்று நிர்வகித்து வருகிறான். இந்த கிராமத்திலே அவன் பீட்டர்ஸ்பர்க்கில் அனுபவித்ததுபோல் இன்ப வாழ்க்கை வாழ முடியவில்லை. மாற்றமெதுவுமின்றி சோம்பேறி வாழ்க்கை நடத்தியவண்ணமிருக்கிறான். இந்த நிலையில் லென்ஸ்கி என்ற ஜெர்மன் வாலிபன் ஒருவனை சந்திக்கிறான் ஒனிஜின்.

லென்ஸ்கி ஒரு அறிவாளி, அவனுக்கு தத்துவம் இலக்கியம் எல்லாம் உயிர். லென்ஸ்கி ஒனிஜினுக்கு கிராமிய வாழ்க்கையின் இன்பங்களை விளக்குகிறான். அந்தக் கிராமத்திலிருந்துவந்தலாரின் என்பவரின் குடும்பத்திற்கு ஒனிஜினை அறிமுகம் படுத்துகிறான். லாரின் ஒரு சாதாரண மத்தியதர குடும்பத்தினர்.

லாரின் வீட்டிற்கு ஒன்ஜின் வந்ததின் விளைவு டாட்யானா ஒனிஜினின்மேல் காதல் கொள்கிறாள் சின்னாட்களில் தன் பெண்மைத் தன்மையைக்கூட ஒதுக்கிவைத்துவிட்டு ஒனிஜினுக்குக்கடிதம்மூலம் தன் காதலை தெரிவிக்கிறாள். ஒனிஜீன் வாழ்க்கை முறை தெரியாத அறிவிலி. உண்மைக் காதலை அவனால் உணர முடியவில்லை. நினைதத்தைசெய்யும் சக்தி, செயலாற்றும் திறமை அவனிடமில்லை.

'நான் வாழப் பிறந்தவனல்ல. இன்பபுரிக்கும் எனக்கும் வெகு தூரம், எனக்கு திருமணம் ஒரு துன்பச் சுழல். என்னை நீ மறந்துவிடு. நானும் உன்னைக் காதலிப்பதைநிறுத்திக்கொள்கிறேன். என்று வேதாந்தம் பேசி டாட்யானாவின்காதலைமறுத்து விடுகிறாள். ஒனிஜின். ஒனிஜின் என்று எண்ணிய வண்ணமிருக்கிறாள். இந்தச் சம்பவத்திற்குப் பிறகுலாரின் வீட்டிற்குப் போவதை ஒனிஜின் நிறுத்திவிடுகிறான். ஆனால்இவைகளை யறியாத லென்ஸ்கி ஒருநாள் ஒனிஜினை அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான், அன்று டாட்யானாவின் பிறந்த நாள்! ஒனிஜினைப் பார்த்தவுடன் மனதிலிருந்த துக்கம் பொங்கிவீட்டிற்குள் ஓடிவிடுகிறாள். இதைக் காண ஒனிஜின் லென்ஸ்கியினமேல் கோபமடைகிறான். இந்தக்காட்சியைக் காண, வேண்டுமென்றே அவனை லென்ஸ்கி அங்கு அழைத்துப் போனானென்று எண்ணுகிறான். இதற்கு தண்டனை தர எண்ணி அங்குநின்ற ஓல்காவை கட்டியணைக்கிறான், எனிஜின், (ஓல்கா லென்ஸ்கியின் காதலி) லென்ஸ்கி தன் காதலியை ஒனிஜின் தவறாக அணைப்பதைக்கண்டதும்கோபம் அடைகிறான். இருவரும் துப்பாக்கியால் சுட்டுக் கொள்கிறார்கள். லென்ஸ்கிஇறக்கிறான்!

லென் கியை அர்த்தமின்றி கொன்றுவிட்டதைப்பின்உணரும் ஒனிஜீன் அந்தகிராமத்தைவிட்டே சென்றுவிடுகிறான். அவன் மனம் ஒரு நிலையில்லாமல் ஊர் ஊராகச் சுற்றியவண்ண மிருக்கிறான்.

பிறகு, புஷ்கின் சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு கதாபாத்திரங்களை சந்திக்க வைக்கிறார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு பீட்டர்ஸ்பர்க் நகரத்தில் கதை தொடருகிறது. ஒன்ஜின் பலநாடுகள் சுற்றிவிட்டு கடைசியாக பீட்டர்ஸ்பர்க் வருகிறான், அங்கு ஆடம்பரமான விருந்தொன்றில் காண்கிறான் டாட்யானாவை வயது முதிர்ந்த பிரபு ஒருவனின் மனைவியாக ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு டாட்யானா வைரங்கள் ஜொலிக்கும் நகையணிகள் பூண்டு மது அருந்திகொண்டிருந்தாள். ஒன்ஜின் இப்பொழுது அவன்மேல் அடங்காக் காதல் கொள்கிறான். டாட்யானாவும் அவனை அடையாளம் தெரிந்து கொள்கிறாள். ஆனால் பேசவில்லை. ஒனிஜின் அவளிருக்மிடைத்தையேவட்டமிடுகிறான்.

கடைசியாக ஓர்நாள் தன் அன்புக் காதலை விளக்கி கடிதமொன்றை எழுதி எடுத்துக் கொண்டு அவளை சந்திக்கிறான்.

புஷ்கின்

அதைக் கொடுத்துவிட்டு அவள் காலில் விழுகிறான்! டாட்யானா சாந்தமாக அவனுடைய கடிதத்தைப் படிக்கிறாள். பிறகு ஒரு பெருமூச்சு விடுகிறாள். அவனை தூக்கி நிறுத்திவிட்டு பின்வருமாறு கூறுகிறாள். 'ஒனிஜின்! என்னுடைய பிரபுத்துவ வாழ்க்கையைக் கண்டு நீயே புகழ்கிறாய். ஆனால் இந்த பதவி, பட்டம், பணம், படாடோபம், அரண்மனை. மண்டபம் மான் ஓடும் சோலை, அதில் குளிர்புனல் கொட்டும் நீரூற்றுஎல்லாவற்றையும்துறந்துவிட்டு பழைய கிராமீய வாழ்க்கை. மட்பாண்டம், கூரைக் குடிசை ஆற்றோரம் இவைகளுக்கு வரத் தயார். யாருக்காக? அன்று நான் கூரையினடியில் வாழும்போது சந்தித்தேனே, அந்த ஒனிஜினுக்காக! ஆனால் இன்று நான் வேறோர் பிரபுவின் அலங்காரப் பொருள்! நீதிப்படி அவர் மனைவி. என் சதைப் பிண்டம் அவருக்கு உடமையாக்கப்பட்டிருக்கிறது. என் உள்ளம்...? அது மாத்திரமென்ன? என்னுடைய இருதயத்திலே நீதான் குடிகொண்டிருக்கிறாய். எப்போதுமே இருப்பாய் ஆனால் இது மாத்திரம் நிச்சயம் நான் வாழ்க்கைப்பட்டவனைவிட்டு இனிமேல் பிரிய முடியாது. என்

3—2—63 முதல் புதிய நிர்வாகத்தின் கீழ்

புதுப்பொலிவோடு வருளிவருகிறது!

'கழகக் குரல்' திருவை ஆ. அண்ணாமலை

பிரதி ஒன்றுக்கு 75 காசுகள் வீதம் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். தனிப்பிரதி 15 காசுகள்.

நிர்வாகி, கழகக்குரல்
151-ராமகிருட்டிண மடம் ரோடு,
மைலாப்பூர், சென்னை-4

உயிர் பிரியும்வரை என்னை மணந்தவனுக்கு நான் உண்மையாகவேயிருப்பேன், இப்படிக்கூறி ஒனிஜினைதிருப்பி அனுப்பிவிடுகிருள்!

—*:*—

கோகேல்

மேலங்கி

‘கோகேல்’

மேலங்கியின் கதாநாயகமான குமாஸ்தாவிற்கு உலகத்தில் எந்த விதமான இன்பமும் கிடையாது அவனுக்கு எதிலும் ஆசையும் கிடையாது. அவனுக்கு அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட வேலையை அலுப்புத் தட்டாமல் செய்து வருகிருன் அவன்.

அவனுக்கு அலுவலகத்தில் கொடுக்கபட்டப்வேலை பத்திரங்களுக்குநகல் எடுப்பதுதான். இந்த சத்தற்ற வேலையை அலுப்புத் தட்டாமல் செய்துவருகிருன் அவன். இந்நிலையில் அவனுக்கு திடீர் ஆசை ஒன்று வருகிறது. அதாவது, அவனுடைய கிழிசல் மேலங்கியை எறிந்துவிட்டு, புத்தம்புதிய உயர்ந்த மேலங்கி வாங்கி தரிக்க வேண்டுமென்று ஒரே ஆசை. ஆனல் இந்த மேலங்கி வாங்குவதற்கு அவனிடம் பணம் ஏது? அவன் முன்பே வறுமையாளன் தானே? இருந்தபோதிலும் புதிய மேலங்கியை வாங்க மாலை நேரத்தில் களைப்பு நீக்கும் பானங்கள் அருந்துவதை நிறுத்துகிருன். இரவில்தன்அறையில் விளக்கு ஏற்றுவதில்லை. பழையசெருப்பு சீக்கிரம்தேய்ந்து விடுமோ என்று பயந்து மெதுவாகக் நடக்கிருன்! இப்படியெல்லாம் சிக்கன வாழ்க்கை நடத்தி கடைசியாக ஒரு புதிய மேலங்கியை வாங்கி வருகிருன். அன்றுதான் அவன் மனிதனுனன்! மனிதத் தன்மையோடு ஒரு காரியத்தைப்பற்றி எண்ணி, முயற்சி செய்து வெற்றி பெற்ருன். அவனுடைய வாழ்க்கையின் ஒரே ஆசை அன்று வெற்றி பெற்றது. மிக்க மகிழ்ச்சியோடு அந்த புதிய மேலங்கியை அணிந்து அலுவலகம் வருகிருன்.ஆனல் பரிதாபம்! அவனுடைய உழைப்பின் வெற்றியை அவன் அநுபவிக்க முடியவில்லை. அன்றிரவே சில கொள்ளைக்காரர்கள் அவனுடையமேலங்கியை அபகரித்துப்போய்விடுகின்றனர்! மனதொடிந்த நிலையில் மேலங்கியை திருடியவர்களைத் தேடியலைகிருன். ஆனல் அதுஎப்படி அகப்படும்.இந்தத்தேடும் படலத்தின்காரணத்தின் காரணமாக அவன் பலருடைய கேலிக்காளானதுதான் மிச்சம். அவன ஆபீசர் ஒருவனே அவனை மனதொடிந்து போகுமளவுக்குக் கிண்டல்செய்து விடுகிருன். இப்படி மிதமிஞ்சிய சோகத்தில் குளிர்ஜுரம் கண்டு இறந்து விடுகிருன் குமாஸ்தா. ஆனல் அவனுடைய ஆவி அவனை கேலி செய்து கொடுமைப்படுத்திய அந்த ஆபீஸரின் மேலங்கியையே அபகரித்துக் கொள்கிறது! ஏமாளியானபொழுது தன்னை கேலி செய்ததிற்கு பழி வாங்கிக்கொள்கிருன் குமாஸ்தா.

*   *   *

லிசா

துர்கனில்

எலின அறிவு வழியில் செல்ல தீர்மானம் கொண்டவள். பயனற்ற வாழ்க்கையை வெறுப்பவள், தன் கொள்கைக்காக உயிர் கொடுக்கவும் சித்தமாயிருப்பவள். ஆனல் அவள் அன்ருடம் சந்திக்கும் உருவங்கள் எவை?

தற்பெருமை கொண்ட ‘சுபின்’ என்ற ஓவியன், வாழ்க்கையை அதிகமாக ருசித்துவிட்டு உலகக் கவலையற்று வாழும் மனித உருவம்.

மற்ருெருவன் பெர்ஸனுவ். நல்லவன். ஆனல் உணர்ச்சியும் கொள்கை வெறியுமற்றவன். எதையும்பற்றி எண்ணுகிறவனல்ல.

இந்த இருவரும் எலினவை மனமாரகாதலிக்கின்றனர். இருந்தும் இவர்கள் காதலை எலின எப்படி ஏற்றுக் கொள்வாள்.

இந்த சூழ்நிலையில்கதாநாயகன் இன்ஸாராவ் எனும் பல்கேரியன் தோன்றுகிருன். அவனுக்கு வாழ்க்கையில ஒரே குறிக்கோள்தான். தாய்நாடாகிய பல்கேரியா விடுதலை பெற்று சுதந்திரமாக வேண்டும் என்பதுதான். அதற்காக அவன் தன் உயிரையே பணயம் வைக்கத் தயாராகிருன். இபபடிப் பட்ட வீரனை கண்டதும் எலினவின் ஆனந்தத்தைப்பற்றி எழுதவா வேண்டும், அவனைக் கண்டதுமே அவன்பால் அடங்காக் காதல் கொள்கிருள். இன்ஸாராவ் முதலில் எலினவின் மேல் கொள்கை காரணமாக பிரியம் கொள்கிருன். பிறகு விரைவில் அவள்மேல் அவனுக்கும் காதல் தோன்றுகிறது. ஆனல் இந்த காதல் எண்ணம் தோன்றியதும் இன்ஸாராவ் பயம் கொள்கிருன். அவனுடைய லட்சியம் கொள்கைகளை விட்டு விட்டு அவன் காதல் விளையாட்டு விளையாட முடியுமா? ஆகவே எலினவை விட்டு தனித்துச் செல்வதென்ற முடிவுக்குவருகிருன்.

எலினவின் வீடு சென்று தன் முடிவை அறிவிக்கிருன். எலினவிற்கு இன்னராவின் திடீர் பயணத்திற்கு காரணம் கண்டுபிடிக்கவில்லை. இருந்த போதிலும் மறுதினம் தன்னை வந்து பார்த்து விட்டுப்போகுமாறுவேண்டுகிருள். இன்ஸாராவும் பதில் கூருமல் சென்று விடுகிருன்,

மறுநாள்எலின,இன்ஸாராவிற்காக காத்துக் கொண்டிருக்கிருள். அவன் வரவில்லை! பிறகு அவள் அவன் விடுதி நோக்கி ஓடுகிருள்

துர்கனில்

இன்ஸாராவின்மேல் அவளுக்கேற்பட்ட காதல் நிமிஷத்திற்கு நிமிஷம் வளருகிறது. மழை, இடி, மின்னல் எதையும பொருட்படுத்தாமல் தெருவில் ஓடுகிருள், அதிக மழைக்காக ஒரு கோவிலில் ஒதுங்குகிருள். அங்கே இன்ஸாராவும் நின்று கொண்டிருக்கிருன்!

எலீன அவனை அங்கு எதிர் பார்க்கவில்லை, கண்டதும் அப்படியே கட்டிக் கொள்கிருள். தன்னுடைய வெட்கமெல்லாவற்றையும் ஒரு பக்கத்தில் மூட்டை கட்டி விட்டு தன் காதலை அவன்கொண்டுள்ள கொள்கையின்மேல் உள்ளபற்றை அப்படியே அவனிடம் வெளியிடுகிருள். அவன் சைபீரியாவிற்கு கைதியாக அழைத்துக் கொண்டு போகப் பட்டால்கூடத் தான்பின்தொடரப் போவதாகக் கூறுகிருள், இன்ஸாராவிற்குஏற்பட்ட ஆச்சரியம் மகிழ்ச்சி இவைகளுக்கு அளவேயில்லை, “அப்படியானல் என் மனைவியே, உன்னை முழு அன்போடு வரவேற்கிறேன்!” என்று தலை குனிகிருன்.

—:—

கொள்கை

“பிரிட்டிஷார் இந்தியாவைச் சுதந்திர நாடாக்கினல் யுத்த முயற்சிக்கு காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்றதீர்மானத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றிய போது, சர்தார்பட்டேல், டாக்டர் ராஜேந்திரபிரசாத், ஆச்சாரியா கிருபளானி, டாக்டர் பிரபுல்லாகோஷ் முதலியவர்கள் காரியக் கமிட்டியிலிருந்து ராஜினமாச் செய்ய விரும்பினர். அகிம்சை தங்களுக்கொரு சித்தாந்தம் என்றும், இந்திய சுதந்திரத்தைவிட அதுவே முக்கியத்துவம் உள்ளது என்றும் அவர்கள் எழுதியிருந்தனர்.

எனினு 1947-ல் இந்தியா விடுதலை பெற்றபோது அவர்களில் ஒருவரேனும் இந்தியப் படைகளைக் கலைத்தாக வேண்டுமென்று கூறவில்லை. அதற்கு மாருக, அவர்கள் இந்தியப் படைகளை பிரிவினை செய்து அதை இந்திய சர்க்காரது அதிகாரத்தின் கீழ் உடனடியாகக் கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்தினர். அப்போதைய சேனதிபதியின் உத்தேசத்துக்கு மாருக இருந்தது அது. மூன்று வருடங்களுக்குக் கூட்டுப்படையும், கூட்டுத் தலைமையும் இருக்க வேண்டும் என்று சேனதிபதி யோசனை கூறியிருந்தார்! ஆனல், அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அகிம்சையே அவர்களது சித்தாந்தமாய் இருக்குமாயின், படைகளுக்காக நூறு கோடி ரூபாய்களை ஒரே வருடத்தில் செலவழித்த சர்க்காரில் அவர்களால் எவ்வாறு பொறுப்பேற்பது சாத்தியமாயிற்று? உண்மையில் அவர்களில் சிலர் படைச் செலவை அதிகரிக்கவே விரும்பினர், குறைப்பதற்கல்ல.”

அபுல்கலாம் ஆசாத்
‘இந்திய விடுதலை வெற்றி’ நூலில்

பொங்கலன்று வெளிவருகிறது!
‘போர்க் குரல்’ (வார ஏடு)
ஆசிரியர் : புலவர் இளஞ்செழியன்
புது ஏடு! பூக்காடு!
விற்பனையாளர்கள் முன்பணத்துடன் எழுதுக.
விவரங்கட்கு :—போர்க்குரல், அம்சாபிரஸ்,
28, பாலக்கரை, திருச்சி-1

பள பளப்பு

அரங்கண்ணல்

'இந்த உலகமே உண்மையை விடப் பொய்களைக் கண்டு தாங்க பல்லை இளிக்குது, பார்த்ததும்மயங்குது. காரிலே போறவனைக் கண்டா கனவான்னு நினைக்கிறோம்! ஏர் பிடித்து எப்பவும் உழைக்கிற உழவனை ஏளனமாக நினைக்கிறோம். நினைச்சுப்பாருங்க! பங்களாவிலேயிருக்கிறவங்க நாலணவுக்கு ஒரு கண்ணாடி வளையல் போட்டுக்கொள்ளட்டும், வர்ணிப்போம். நானூறு ரூபாய்க்கு ஒரு ஏழை தங்க வளையல் அணிந்திருக்கட்டும் அதைப் பித்தளை வளையல் என்போம். ஊம்! கில்ட்டைப் பளபளப்பாக்கி மகிழ்ந்துட்டுதாங்க இந்தச் சிறைக்குள்ளே நானும் வந்துகிடக்கிறேன்!!'' என்றான் கைதி கண்ணப்பன்.

"ஊம்! எத்தனை நாளைக்கு இப்படியே மேனேஜராக இருக்கிறது? ஆயிரம் பணக்காரங்க இங்கே வர்ராங்க. அவங்க மனசு கோணா மடக்கணும். நல்லப் புள்ளியாப் புடிச்சு அவுங்க நம்பிக்கையைப் பெறணும். திடீர்னு பண உதவி கேட்டால் கிடைக்கிறபடி யாரை யாவதுபுடிக்கணும். நாமும் ஒரு நாளைக்கு இதேப்போல ஒருபெரிய ஓட்டல் நடத்தணும்'' என்று தினமும் பணத்தையெண்ணி பெட்டிக்குள்ளே வைக்கும்போது ராமன்நாயர் நினைப்பார். இதனால் அந்தப் பெரிய ஓட்டலுக்கு தங்க வரும் 'பெரிய புள்ளி' களிடம் பவ்யமாக நடப்பார்.

"தனி, ரூம் வேணும்! வாடகையைப் பற்றிக் கவலையில்லை. எங்க எசமான் இரும்பூர் ஜமீன்தாராயிருந்தவர்'' என்று கண்ணப்பன் வந்து சொன்னதும் ராமன் நாயருக்கு ஒரே கொண்டாட்டம்! எப்படியாவது இந்த ஜமீன்தாரை வளைத்துப்போட வேண்டும் என்கிறமுடிவுக்கு வந்தார்.

கண்ணப்பன் சொன்ன கர்ண பூபதி ஜமீன்தாரல்ல! அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன செய்வது என்று யோசித்து, எங்கேயாவது விழுந்து சாகலாம் என்கிற முடிவுக்கு வந்த நேரத்தில் கண்ணப்பனுக்கு ஒரு யோசனை வந்தது!

"டேய் கர்ணு! இடியட், ராஸ்கல், முட்டாள், கெட் அவுட்டுன்னு இந்த பெரிய பட்டணத்திலே என்னென்ன சொல்றாங்க. இவன்களைப் பழிவாங்கணும்கிற முடிவுக்கு வந்துட்டேன். கத்தியெடுத்துக் குத்தறதோ, இருட்டு வேளையில் புகுந்து திருடறதோ, அவசரக்காரன் செய்ற வேலை. அதனாலே மாட்டிக்கிட்டு ஜெயிலுக்குப் போகததான் வேண்டியிருக்கும். இப்படியெல்லாம் செய்யாமே 'கௌரவமா' திருடிக்கிட்டு 'கௌரவமா' வாழணும். நான் வழி சொல்றேன்!!'' என்றான். அந்த முடிவில் கர்ணன் 'திடீர்' ஜமீன்தார் ஆனான். அவனுக்குக் கண்ணப்பன் பணியாள் ஆனான்.

*

"நீ பெரிய எழுத்தாளனாயிருக்கலாம்! எத்தனை சினிமாவுக்கு வேண்டுமானாலும் கதை யெழுதலாம். நீ சொன்னதை நம்பி, இரண்டுவாரமா, ஓட்டலிலே தங்க வைச்சேன். இருநூறு ரூவா ஆச்சு பில்லு. கொடு! இல்லே காலி. செய்!!'' என்று, கத்திக் கொண்டிருந்தார் ராமன் நாயர், ஜமீன்தாரும் பணியாளும் வந்த கொஞ்ச நேரத்துக்குள்.

எழுத்தாளன் பாக்கிமுத்து என்ன செய்வதென்று புரியாமல் மானேசர் போலீசுக்குப் போன் செய்து பிடித்துக் கொடுத்துவிட்டால் மானம் போகுமே என்று கலங்கியபடி நின்று கொண்டிருந்தான்! கண்ணப்பனுக்கும் கொஞ்சம் மிரட்சிதான். தான் போட்டிருக்கும் திட்டப்படி எதுவும் நடக்காவிட்டால் நாளைக்கு நமக்கும் இதே கதிதானே என்றெண்ணிய போது, நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

பாக்கிமுத்து ஓட்டலில் கதை எழுதமட்டுமல்ல வந்து தங்கியது! யாராவது 'பெரிய புள்ளி' கிடைத்தால், தனக்குச் சினிமா உலகிலுள்ள அனுபவங்களைச் சொல்லி அவர்கள் 'உதவி' யால் தனியாக ஒரு கம்பெனி வைக்க வேண்டும் என்பது அவன் ஆசை. அப்படி ஒரு கம்பெனி ஏற்படுத்தி : அவசியம் உங் தாவைக் கதாநாயகியாக் றன் என்று அம்பிகாவிடம் சொல்லியிருந்தான். அம்பிகா ஒரு முன்னாள் நடிகை. வசதியுள்ளவள். பணக்காரி.

அவளை 'வைத்திருந்த' செட்டியாருக்கோ, சீதாவை சினிமாவில் 'ஆக்டு' செய்யவிடாமல் பெட்ரோல் பங்க் பெருமாளுக்கு ங் கட்டிக் கொடுக்க வேண்டு என்று எண்ணம்!!

பருமாள் னில் அவனை ம ளுக்கிக் கொண்டால் 'ரேஸ்' ீட்டாட்டம் எல்லாம் அவன் தயவிலே நடக்கும் என்பது செட்டியார் திட்டம். இப்படி 'பெரிய புள்ளி' யாக ஆக வேண்டும் என்கிற ஆசை ஒவ்வொருத்தர் நிலைமைக்குத் தக்கபடி ஒவ்வொருவரையும் ஆட்டிக் கொண்டிருக்கிறது!!

"மிஸ்டர் நாயர்! கமான்! ஏன் இப்படிக் கத்தறே? இன்னொருதரம் கத்தினே எங்கய்யா உடனே உன் ஓட்டலைவிட்டு வேறு இடத்துக்குப்போயிடுவார். என்ன கொடுக்கணும் அவர்? இருநூறு ரூபாயா! இது ஒரு பெரிசா! பாவம் பயப்படாதீங்க மிஸ்டர். மானேஜர் நாயர்! அந்த இருநூறு ரூபாயையும் எங்கக் கணக்கிலே எழுதிக்கிட்டு, மொதல்லே அவரைப் போகச் சொல்லும்படி எசமான் சொல்லச் சொல்கிறார்!!'' என்று படபடவென்று கண்ணப்பன் பொறிந்துதள்ளினான்!

மானேஜர், இருநூறு ரூபாயை அநாயசியமாகத் தங்கள் கணக்கில் வைத்துக் கொள்ளச் சொல்லும் இவர் பெரிய ஆளாகத்தானிருக்கவேண்டும் என்று எண்ணினான். அதேபோல பாக்கிமுத்துவும் ஒரு பெரிய புள்ளியின் தயவு தனக்கு 'நெருங்கி வருவதாக'க் கருதினான். தன்னைப் போலீஸ் கெடுபிடியிலிருந்து தப்ப வைத்த கண்ணப்பனுக்கு நன்றி சொன்னான். அவன் மனதிலிருந்த ஆசையைப் புரிந்துகொண்ட கண்ணப்பன் அடுத்த 'திட்டத்துக்குப் பலமான அஸ்திவாரம் கிடைத்துவிட்டதாகத் திருப்தி கொண்டான்!!

* * *

"பெரிய புள்ளிங்க! அஞ்சு லட்சம் வரைக்கும் 'பைனான்ஸ்' க்கு அரேஞ்சு பண்ணிட்டேன். சீதா தான் கதாநாயகின்னு சொன்னேன். புது ஆளை நம்பி எப்படி பணம் போடுறதுன்னு பயப்பட்டார். சீதாவைப் பாருங்க, பிறகு சொல்லுங்கன்னு சொல்லி உங்களைக் கேட்காமலே 'இன்னைக்குச் சாப்பாட்டுக்கு இங்கே வரணும்னு அழைச்சிருக்கேன்' நான் சொன்னது தவறில்லையே!!'' என பாக்கிமுத்து அம்பிகாவிடம் சொன்னபோது, அம்பிகா, தன் மகளுக்கு வரப்போகும் அதிர்ஷ்டத்தை யெண்ணி உடனே சம்மதித்தாள். ஏற்பாடுகளைச் செய்தாள்.

ஆனால் செட்டியாரோ திடுக்கிட்டார்! தன் கையை விட்டுத் தாயும் மகளும் போய்விட்டால் பிறகு தன்பாடு ஆபத்தாகும். பெருங்காயமிருந்த பாண்டம் என்கிற பெருமையை அம்பிகாவிடம் காட்டி, அம்பிகாவிடமிருக்கும் ஆடம்பரங்களைத் தான் அனுபவித்தப்படி, பட்டணத்தில் பெரிய புள்ளியாக உலவிவருகிறவரல்லவா, அவர்? அதனால் அன்றைய விருந்துக்கு மறந்துவிடாமல் 'பெட்ரோல் பங்கை' யும் அழைத்து வந்திருந்தார்!!

* * *

"பி. ஏ. படிச்ச நான் சினிமாவிலே நடிக்கணும்குது, அம்மா,

(9—பக்கம் பார்க்க)

"நானிருக்கும் ஊர்!"

'கூவம் ஒரு பக்கம் ஓடும்! குழாய்த் தண்ணீர் இன்னொரு பக்கம் பக்கம் வரும்! அசைந்து செல்லும் எருமை! ஓடிப்பறக்கும் கார்கள்! ஒய்யார மாடமாளிகைகள் உண்டு! அதே ஊரில் உள்ளத்தைக் கலக்கும் குடிசைப் புறங்களும் ஏராளம்!' அடடா,

" வந்துதைத்த வெண்திரைகள்

செம்பவள வெண்முத்தம் "

என்று மயிலாப்பூர்ப் பேயாழ்வார் சுமார் 1400 ஆண்டுகளுக்குமுன் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நின்று பாடினாராம்! ஊர்ந்து ஏறிப் பாவும் அலைகள் கொண்ட சமுத்திரம் உலாவிடும் மயிலாப்பூரே என்று சைவர் திருஞான சம்பந்தர் 1300ஆண்டுகளுக்குமுன்பு மயிலாப்பூர் கடற்கரையில் நின்று,

" ஊர்திரை வேலை

உலாவும்

உயர் மயிலை "

எனவியந்தாராம்! மயிலைப்பேயாழ்வாரும் சோழ வளநாட்டு சம்பந்தரும் பாடியபோது, 'காப்பி'க் கிளப்புகள் இல்லை, குழாய்இல்லை, மின்சார விளக்கு இல்லை, 'விகடன்' இல்லை, 'இந்து' இல்லை. அந்த மயிலைச்கு ஆங்கிலம் தெரியாது.

மயிலை—பேரும் அழகு, ஊரும் அழகு. இந்நாளில் இல்லாத பொருள் வளமும் வாணிப வளமும் அந்நாளில் உண்டாம்! 12ம் நூற்றுண்டினரும், இரண்டாவது குலோத்துங்கச்சோழச்சக்கிரவர்த்தியின் பிரதமருமான சேக்கிழார் இக்கடற்கரையிலே நடைபெற்ற வாணிபத்தையும், பெரும் பெரும் பொருள்களை வியாபாரிகள் தமது கடற்கரை மாளிகையில்கொண்டு சேர்ப்பதையும், கப்பல்களில் யானைகள் வந்திறங்கிய காட்சியையும வர்ணித்திருக்கிறர்.

" பல் பெருங்குடி

நிடு பரம்பரைச்

செல்வம் மல்கு

திருமயிலாபுரி" என்று. ......'லாபுரி!' என்று அவர் பாடியது இன்றும் பொருந்தும்! சட்டங்கள் சதிராடும 'லாபுரி' இது, இன்று!! திருவல்லிக்கேணிக்கு வந்த திருமங்கையாழ்வார்! தேனமர் சோலை மாடமா மயிலை' என்றும், திருஞான சம்பந்தர் 'மடல் ஆர்ந்த தெங்கின் மயிலை' என்றும் வர்ணித்திருக்கும் கண்ணுக்கினிய சோலைகளும் தென்னந் தோப்புகளும் இன்றும் உண்டு, ஏராளமாக!!

எப்தியருடைய பூகோளக் குறிப்பிலும், நாலமியின் நூலிலும் மயிலாப்பூரைப் பற்றிக் குறிப்புகள் உள்ளனவாம்! புகழ்வாய்ந்த மயிலை, சைவ வைணவப் போட்டிக் கிடங்காக மட்டுமல்ல, ஆழ்வார்களும் நாயன்மார்களும் நுழைந்து மகிழ்வதற்கு முன்பே சமணர்களின் 22வது தீர்த்தங்கரருக்கு மயிலையில் கோயில் இருந்ததாம். அக்கோயிலோடு மயிலையின் ஒரு பகுதியைக் கடல் கொண்டு விட்டதாம். அந்தச் சமணமூர்த்தி இப்போது கடலின் அச்சமில்லாமல் தென் ஆற்காடு சித்தாய்மூரில் உள்ளார்! கடல்கொண்ட மயிலைப் பகுதி இபபோதுள்ள சாந்தோமுக்குக் கிழக்கே இருந்திருக்க வேண்டும்.

'நன்னூல்' என்கிற தமிழிலக்கணத்தின் உரையாசிரியர் மயிலைநாதர் என் ஊர்தான்! மகேந்திர வர்ம பல்லவ சக்கிரவர்த்தியால் மயிலைக்கு அருகேயுள்ள 'பல்லவர்புரத்தில்' (இப்போதைய பல்லாவரம்) சமணத் துறவிகளுக்கென ஐந்துகுகைகள் அமைக்கப் பட்டிருந்தன இத்தனைக்கும்மேலாக மூன்று முதலாழ்வார்கள், மகேந்திரன் ஆகியோரி காலத்துக்கு முன்பே வாழ்ந்த கமசர ஞானி, உலகப் பொதுமறை வழங்கிய, திருவள்ளுவரும் என் ஊர்காரர் தான்! இப்போதும் வேறெங்குமில்லாவிட்டாலும் அவருக்கு இங்கேகோயில் உண்டு!

இதுமட்டுமா! இயேசுநாதரின் அருமைச் சீடர்களில் ஒருவரான செயிண்ட்தாமசின் தொடர்பும் மயிலைக்கு உண்டு. கி. பி. முதல் நூற்றுண்டில் மயிலையில் கிறிஸ்து மதப் பிரச்சாரம் செய்தாராம்! இவர் வசித்த இடம்தான் 'செயிண்ட் தாமஸ் மவுண்ட்' அதாவது பறங்கிமலை. கி. பி. 13ம் நூற்றுண்டிய் மார்கோபோலோ எனும் இத்தாலிய யாத்திரீகன் எழுதிய குறிப்பொன்றில் 'ஒரு மயிலைத் துரத்திவந்த வேடன் எய்த அம்பு பிரார்த்தனை செய்து கொண்டிருந்த செயிண்ட் தாமசைத் தற்செயலாகக் கொன்று விட்டது! என்கிறர்.போர்த்துகீசியர் முதன் முதலில் வந்ததும் தரமசின் கல்லறையைக் கண்டுவிட்டதாக நம்பி அந்த இடத்தில் ஒரு மாதாகோவிலைக் கட்டினர்கள், இக்கோயிலைச் சுற்றி செயிண்ட்தாமசின் நினைவுக் குறியாக எழுந்த ஊரே இன்றுள்ள சாந்தோம்!!

மயிலையில் பின்னளில் வாழ்ந்தார் மஸ்தான்சாகிப்என்னும்முகமதியமகான். இவருடைய தமிழ்ப் பாடல்கள் தாயுமானவரின்பாடல்களைப் போல சமரச ஞானம் போதிப்பனவாகும்! இனிமையும் எளிமையும் நிறைந்ததாகும்!

இன்றைய சென்னையின் வாழ்வில் எவ்வளவோ திருப்பங்கள் நேர்ந்த பின்னரும்கூட அமைதியும் சாந்தமும் தவழுவதாகமயிலை

விளங்குகிறது, மயிலையும் திருவல்லிக்கேணியும் தவிர மீதி எல்லாப் பகுதிகளும் ஜார்ஜ்_வுன் போல், ஆங்கில ஆதிக்கத்திலே தோன்றியது என்று எண்ணுதீர்கள்! ரயில்வே நிலையம் இருக்கும் எழும்பூர் ஒரு பழைய ஊர். அதன் பெயர் எழுமூர். தொண்டை மண்டலப் பகுதியிலிருந்த 'எழுமூர நாடு' எனபதின் தலைமையூர்! தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் 'புழற் கோட்டம்' ஒன்று. புழலேரி இருக்கும் ஊர்தான் புழல். இந்தப் புழற்கோட்டத்தைச் சேர்ந்ததுதான் இன்றுள்ள சென்னை. பக்கத்திலுள்ள 'புலியூர்க் கோட்டத்தை'ச் சார்ந்ததுதான். சேக்கிழாரின் குன்றத்தூர்!! பூந்தமல்லியென்றும் பூவிருந்தமல்லியும் கிறப்பான ஊரே. ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு மதராசை வாங்கிக் கொடுத்த புகழ் பூந்தமல்லி நாயக்கரைச் சாரும். 'அடையாறு' இராமலிங்க அடிகளின் ஞான போதவழியில் துவங்கப்பட்ட 'திவ்ய ஞான சங்கம்' (தியாகசாபிகல் சொசைடி' உள்ள இடம்! இந்திய விடுதலைக்குப் புத்தூயிரூட்டிய பூமி.

நானிருக்கும் ஊரைச் சாமான்யமாக எண்ணுதீர்கள்! தமிழகத்தின் பிற இடங்களைப் போல எல்லாச்சரிதச்சான்றுகளும் கொண்ட சமரச பூமி இது. அதனுல்தான் தலைப்பிலேயேசொன்னேன். நாற்றமடிக்கும் பக்கிங்காம் கால்வாயும் உண்டு! அருகிலே ஆழ்கடலும் உண்டு என்று! கடல்வாணியம் செய்த மீனவப் பெருங்குடி மக்களைக் கேட்டால் பற்பலப் பழங்கதைகளை அறியலாம்.

'இவ்வளவு 'பெருமை'களையும் நினைத்தபடியே ஊருக்குள் நடந்தால் இன்று அப்பப்ப, எத்தனையெத்தனைக்கடைகள்! அங்கேஎவ்வளவு கூட்டங்கள்!!

மாலை நேரம், சோலைகள் பல, உலவுவது போவிருக்கும். எழிலார், மயிலையல்லவா! அதனருகிலேயே சொறிபிடித்த குழந்தைகளும் நிற்பார்கள்! வசந்த மண்டபங்கள் உண்டு! வற்ருத வறுமைக்கு ஆளாகி சாக்கடையோரம் சின்னஞ்சிறு குடிசைகளில் சீரழியும் 'இந்நாட்டு மன்னர்களும்' உண்டு!! அதிகமாக என் ஊரைப் பற்றிச் சொன்னல், எரிச்சல் வரும் உங்களுககு. வேறு எதற்காக இல்லாவிடினும் திருவள்ளுவர் கோயில் ஒன்று இருக்கிறது என்பதற்காகவாவது சென்னைக்கு வந்தால் கொஞ்சம் என் ஊருக்கு வருகிறீர்களா!!

—0—

ஊருக்குள் நுழைந்த பஸ்,
தன்னிருப்பிடம் சேர வேண்டும்!
வழி தவறினால், பாதை திரும்பிச் சுற்றும்.
எப்படிப் போகலாம், கண்டுபிடியுங்கள்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பா, மொங்தைவாயனைக் கட்டிக்கணும்கிருரு. எனக்குன்னு ஆசாபாசங்களே யிருக்காதா? பணமாயில்லே வீட்டிலே? நல்லவரா, என்னைக் காதலிக்கிற ஒரு 'ரோமியோ'கிடைக் மாட்டாரா!'' என்று சீதா எண்ணினுள்.

அதே சமயம் கம்பீரமாக அம்பிகாவுடைய காரில் வந்து இறக்கப்பட்ட கர்ணனே, "டேய், கண்ணப்பா! எனக்குப் பயமாயிருக்குடா. ஏண்டாஇந்தப்போலி வாழ்வு? அகப்பட்டுக்கிட்டா என்னடா ஆகிறது! டேய், டேய்...'' என்கிற எண்ணத்தோடு பயந்தபடியே வந்து இறங்கினுன்.

இருவருடைய'எண்ணங்களும்' ஒருவரையொருவர்சந்தித்தபோது பறந்துபோய் விட்டன! சுந்தர வதனீ இவள், என்று எண்ணினுன். சீதாவைக் கண்ட கர்ணன் 'அழகா வாலிபராயிருக்காரே!' என்று ஒருவித மலர்ச்சி கொண்டாள் சீதா. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதைக் கண்ட பெருமாளோ, தனக்குப் புதிதாக ஒரு 'வில்லன்'முளைத்திருப்பதைப் புரிந்து கொண்டான். விருந்து முடிந்தது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எண்ணம்.

மறுநாள் டெலிபோனில், சீதாவுடன் கர்ணன்பேசினுன். "சீதாயில்லீங்களா கர்ணன் பேசணும்'' என்று கர்ணனுக்குத்தெரியாமலே சீதாவுக்கு 'டயல்' செய்து இருவரையும் பேச வைத்தவன் கண்ணப்பன்! கில்ட்டைத் தங்கமாக்க அவன் எடுத்துக் கொண்ட சபதம் நிறைவேற வேண்டுமே!! இருவருக்கிடையிலும், 'டெலிபோன் காதல்' மலர்ந்தது. கண்ணப்பன் ஏற்பாட்டால் அம்பிகாவுக்கும் சீதாவுக்கும் ஓட்டலில் ஒரு சிறு விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விருந்தின்போது சீதாவும் கர்ணனும் தனியாகப் பேசினர். சீதாவின் தும்பை மலர் போன்ற உள்ளத்தைப் புரிந்து கொண்ட கர்ணன், தன்னைப் பற்றிய உண்மைகளை அவளிடம் சொன்னுன். அவளுக்கும், அவனுடைய நீரோடை போன்ற மனம் விளங்கியது காதலுக்கு ஏழ்மை ஒரு பெரிதோ? 'கவலைப்படேல்! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் புத்தி வரச்செய்கிறேன் என்று உற்சாகமூட்டிவாயைததிறக்காமலிருக்கச் சொன்னுள், சீதா.

* * *

'பங்க்' பெருமாள் 'இரும்பூர்' என்கிற ஊரே தமிழ் நாட்டில் இல்லையென்கிற விபரத்தோடு இரண்டுபேருடைய வண்டவாளங்களையும் விளக்க வேண்டுமென்கிறஆசையோடு, நாலு ஆட்களுடன் ஓட்டலுக்குள் நுழைந்தான்! மானேஜர் நாயரிடம் காதைக் கடித்ததும், அவர் பதறினா. விருந்து, வாடகை பாக்கிமுத்து கடன் எல்லாம் சேர்த்து ஆயிரம் ரூபாய்க்குமேல் ஜமீன்தார் தர வேண்டியிருந்தது. "கேட்டுப் பாரய்யா! உன் 'பில்' முதலிலே வருதான்னுபாரு...'' என்ற பெருமாளின் யோசனைப்படி ஜமீன்தார் கர்ணன் தங்கியிருந்த ரூமுக்குப் போனுர். அங்கே யாருமில்லை! பெருமாளும் நாயரும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்ட கண்ணப்பன், இன்னொரு வழியாகக் கர்ணனுடன் இறங்கிப் போய்விட்டான்.

* * *

''அக்கிரமமாயிருக்கே! இவ்வளவு பெரிய மனுஷரை ஓட்டலிலே கொலை செய்ய வந்தான்னு அவன் என்ன ஆள்? சீதாவை அவனுக்குத்தர்ற தாயாரு சொன்னு! தெகிடுதத்தக்காரன்! எல்லாம் இந்தச் செட்டியாராலே வந்தது, தம்பி! அய்யாவை வேறு ஓட்டலுக்கு அழைச்சுக்கிட்டுப் போக வேண்டாம். அங்கேயும் கொலை செய்ய முயற்சிப்பான், அந்தப் பெருமாள். ஊருக்குப் போற வரைக்கும், இங்கே என் பங்களாவிலேயே இருக்கட்டும்'' என்ருள் அம்பிகா! அவளிடம், தன் எசமானைக் கொல்ல வந்ததாகவும், அதற்காக ஓட்டல் மானேஜர் நாயரை லஞ்சம் கொடுத்து பெருமாள் வசப்படுத்திவிட்டானென்றும் ஒரு போடு போட்டு வைத்தான் கண்ணப்பன்! தன் மகள் சீதா பெரிய 'ஸ்டாரா' ஆகப்போகும் சந்தர்ப்பத்தைக் கெடுக்க இந்தச் சண்டாளன் 'பெட்ரோல் பங்க' யார் என்று சீறினுள் அம்பிகா. பெண்களுக்கே தங்கள் திட்டத்துக்கு யாராவது 'சவால்' விட்டால் வந்து விடுமே ரோஷம்? செட்டியாரும் இப்போது அம்பிகாவுடன் சேர்ந்துகொண்டார்! இருக்கின்ற வசதிகளும் போய்விட்டால்என்ன செய்வது என்கிற பயம் வந்து விட்டது அவருக்கு!!

கார் ஒன்று வந்து நின்றது அதிலிருந்து ஆட்களுடனும் ஓட்டல் மானேஜருடனும் இறங்கினுன் பெருமாள். நடுங்கிய கர்ணனை ஒரு அறைக்குள் போட்டு 'பத்திரமாப் பார்த்துக்க. இங்கேயும் குத்த வந்துட்டான் பெட்ரோல்பங்க்' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான் கண்ணப்பன். ஓட்டல் மானேஜர் சீறினுன். 'இங்கே வாய்யா!' என்று தனியே அவனை அழைத்துப் போய், "நீ பிள்ளைக்குட்டிக் காரன்! பெருமாள் பேச்சைக் கேட்டு ஆடினே, நீதான் உன் முதலாளிக்கு 1000 ரூபா பில் பாக்கியைக் கொடுக்கணும். கொடுக்கலே, உன் முதலாளி, உன்னை வீட்டுக்கு அனுப்பிச்சிடுவான். கர்ணன் ஜமீன்தாரும் இல்லெ, நான் அவர் வேலைக்காரனுமில்லே! ஆனுல் நீ கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு நான் சொல்றபடி தலையை ஆட்டினே. அம்பிகாவொடே சொத்து முழுதும் கர்ணனுக்கு வரப் போகுது! சிதா கர்ணன் மேலே உயிராயிருக்கா. மருமகனு வந்துட்டால் அப்புறம் கர்ணன் கையிலே தாள்பணம். அப்படிப்பணம்வந்துவிட்டால் உன்னுடைய பில்லும் வரும். ஓட்டல் வைக்கவும்பணம் கிடைக்கும். என்ன சொல்றே? வம்புக்கு வந்து ஏமாறபபோறியா! இல்லே, நாள் சொல்றபடி கேட்டு

12-ம் பக்கம் பார்க்க)

வெற்றிக்காக உழையுங்கள்

வெற்றிக்கு உங்கள் பணி மிகவும் இன்றியமையாதது. யாவரும் கடினமாக உழைக்க வேண்டியது மிகவும் அவசியம். நம் படை சக்தியை பலப்படுத்துவதற்கு அதிக அளவில் உற்பத்தி செய்ய தளராது உழைக்கவேண்டும். நாட்டின் வளங்களை ஒன்று திரட்டி, எல்லா முனைகளிலும் வெற்றிகாண கடின உழைப்பு தேவை.

தொழிற்சாலை, பட்டறை, யந்திரசாலை, மாபெரும் தொழிலகம் ஆகியவைகளில் உற்பத்தியை அதிகரிக்க யாவரும் கடினமாக பாடுபடவேண்டும். முன்னணிக்கும் நாட்டின் உள் தேவைகளுக்கும் முக்கியமான பொருள்கள் தங்குதடையின்றி செல்ல யாவரும் உழைப்போம்.

ஒவ்வொருவரும் ஒருபடைவீரன்

அதிக
உற்பத்தி செய்வதிலும் பலமான
பாதுகாப்பு அளிப்பதிலும்

QA 62/F4

(தென் மண்டலக் கவுன்சில் கூட்டம் முடிந்ததும் குமரி முனை யில் நீராடி, ஓய்வெடுத்துக் கொண்டாராம் டில்லி மந்திரி லால்பகதூர்சாஸ்திரி! அப்போது அவர் மனம் என்ன எண்ணியி ருக்கும் என்கிற கற்பனை, இது)

* * *

'நீலத்திரைக் கடலோரம்! நித் தம் தவம் செய் குமரி எல்லை! தண்மணல் பரப்பு! தளிர்க்கா இன்னொரு புறம்! எழில் சேர் கேர ளம்! பொழில் போன்ற தமிழகம்! பூரிக்கச் செய்கிறது, என்னை இந்த இடம்.

டில்லியிலோ, வெயில் காலத்தில் அதிக வெயிலிருக் கும், அதேபோல குளிர்காலத் திலே பனிக்கட்டிபோல உறைந் துவிடும்.

பதப்படுத்தப்பட்ட பாகு போல, பக்குவமாக இருக்கிறது, தென்றல் தவழும் இந்த இடம்! என்னையறியாமலே, இன்பம் ததும்புகிறது, மனதில் சூதுவாது உள்ளவன்கூட இந்தச் சுந்தர மான இடத்துக்கு வந்தால், கவடு சூது விட்டு பளிங்குபோன்ற மனம் பெறுவான்!! நீண்டு பரந்து கிடக்கும் வானத்தைப் பார்க்கி றேன்-அதை முத்தமிடுவதுபோல கண்ணுக்கெட்டாத தூரம் நீண்டு பரந்துகிடக்கும் கடலையும் காண் கிறேன். இதைப்போன்ற பரந்த மனப்பான்மை ஏன் மனிதனுக்கு மட்டும் ஏற்படுவதில்லை? அதோ அந்தப் பறவைகள், எந்தவிதச் சலனமும் இல்லாமல் பறந்து திரி கின்றன! அதைப்போல் அச் சமோ பயமேஇல்லாமல் ஏன் மனி தர்களால் வாழமுடிய வில்லை?

எனக்கே எண்ணிப் பார்க்க வெட்கமாயிருக்கிறது! அண்ணா துரை டில்லி ராச்சிய சபையில் பேசினர். சீன ஆக்கிரமிப்புப் பற் றியும், அதற்கு வேண்டிய ஆத ரவைச் சர்க்காருக்கு நிபந்தனை யின்றி தன்னுடையகட்சி கொடுக் குமென்றும் அவர் பேசியபோது உண்மையில் நான் ஆச்சரியப் பட்டேன். ஒவ்வொரு தடவை வரும்போதும் என்னிடம் திராவிட முன்னேற்றக் கழகம் தீதானக் கட்சி, விட்டுவைக்கக் கூடாது அதிக நாளைக்கு என்று 'இந்தப் பக்கத்துக் காங்கிரஸ் மந்திரிகள் சொல்லவுண்டு. அதையெல்லாம் கேட்டு, அண்ணாதுரை என்றால் பூதம் போல இருப்பார், 'பிசாசை'ப்போல நம்மை அதட்டுவார், அடிக்க வருவார் கையை ஓங்கிக் கொண்டு என்றுதான் கற்பனை செய்து வைத்திருந்தேன்! ஆனால் ராஜ்ய சபையில் அவர் பேசியப் பேச்சைக் கேட்டபோது, அவரு டைய பரந்த உள்ளத்தை நான் கண்டேன். வியந்தேன், மகிழ்ந் தேன். உணர்ச்சியை அடக்கிக் கொள்ளமுடியாமல் சபையிலே மனந் திறந்து அவரைப் பாராட்டினேன்!

குமரி முடிவு

"சிலபேருண்டு, பேசுவது ஒன் றாயிருக்கும், செயல் வேறாயிருக் கும். ஆனால் ராஜ்ய சபையில் என்ன பேசினாரோ அதேபோலத் தன் கட்சியின் மூலம் பொன்னும் பொருளும் திரட்டித் தருகிறார்' எவ்வளவுதூரம் எனக்கெல்லாம் அவருடைய கட்சி என்றால் வெறுப்பு இருந்ததோ, அந்தள வுக்கு அவருடைய கட்சியை மதிக்கவேண்டிய அளவுக்கு அவ ருடைய சொல்லும் செயலும் இருந்துவருகிறது!

"அப்படிப்பட்ட அரசியல் கட் சியை அடிக்க வேண்டும் என் பதுபோல என் தலைமையில்கூடிய தென்மண்டலக் கவுன்சில் தீர்மா னம் போட்டிருக்க வேண்டியது அவசியமா? எல்லையற்ற இந்தக் கடல் பரப்பைக் கண்டாவது காம ராசருடைய மனம் பரந்ததாக ஆகக் கூடாதா! என்ன மோசம் வந்துவிடும் தி. மு. க வால்? எதற் காக இந்தப் பிரச்சினையை எடுத் துவந்து, இச்சமயம் விவாதிக்கும் படி செய்தார்கள்? உருண்டு ஓடும் வெண்மேகங்களைக் காண எனக் கே வெட்கமாயிருக்கிறது!

மனிதனாகப் பிறந்தவன் மனம் தும்பைப் பூப்போலத் தூய்மையா கயிருந்தால் என்ன நாசம் வந்து விடப்போகிறது? திராவிட முன் னேற்றக் கழகம் வளர வளரக் காங்கிரசுடைய செல்வாக்குத் தென்னாட்டில் குறைகிறதென் பது உண்மைதான்! அதற்காக நாங்கள் எல்லாம் பக்க பலமாகயி ருக்கிறோம் என்பதற்காக, அந்த கட்சியையே தடை செய்ய வேண் டும்—அதுவும் இந்த நெருக்கடி நேரத்திலேயே செய்ய வேண்டும் —என்றால், எண்ணவே என் இத யம் வேதனைப்படுகிறது!!

காங்கிரஸ் கட்சியின் செல்வாக் கைத் தியாகம், சேவை மூலம் வளர்ப்பதைவிட்டு, எதிர்க் கட்சி களை இந்த நேரமாகப் பார்த்து எந்தச் சாக்கிட்டாவது ஒழித்தால் தான் நாம் வாழ முடியுமென்று நினைப்பது, செச்சே சுத்த அவ மானம்! அதற்கு நானும் தலையாட் டியது எனக்கே பெரிய அசிங்கம்!

என் மனதுக்குச் சாந்தியே ஏற்ப டாது போலிருக்கிறது!

எதிரேயுள்ள கடலில் கப்பல் மிதக்கிறது! அரசாங்கம் என்ப தும் ஜனசமுத்திரத்தில் மிதக்கும் கப்பல்தானே. ஜன சமுத்திரத் தின் அலைகள் ஓங்கி ஓங்கி அடித் துக் கப்பலே ஓட்டையானால் பிறகு என்ன செய்ய முடியும்? அதிகா ரத்தைப் பயன்படுத்தி அரசாங் கத்தை ஓட்டைக் கப்பலாக்காம லிருக்க வேண்டும், காமராசர்!

என்னமோ யோசிக்கயோசிக்க என் மனம் ஒரு நிலையில் இல்லை. பிரிவினை கூடாது என்று கூறும் நான் 'தென் மண்டலக் கவுன்சில் எனலாமோ? அதுமட்டும் பிரி வினையில்லையோ! ஏன் ஆந்திரா, கேரளா, தமிழகம், கன்னடத்தை மட்டும் கூட்டி அதன் பிரச்சினை களைத் தனிப்பட்ட முறையில் பேசவேண்டும்? அதிலிருந்தே இந்த நான்கு பகுதிகளின் பிரச்சி னைகளும் ஒன்றையொன்றை தழுவியவை என்று தி. மு. க. சொல்வது உண்மைதானே? பிரி வினை' என்று சொல்லும் போது அந்த வார்த்தையைக் கேட்கக் கோபமாகயிருக்கிறதே ஒழிய அதி காரம் அந்தஸ்து அதிகம் வேண் டும் என்பதுதானே அந்த கோரிக் கையின் பொருள்? செச்சே, நாம் மகாமோசம் செய்துவிட்டோம் மனச்சாட்சிக்கு! சூரியபகவானே நீ சாட்சி! இதை நான் வேறு யாரிடமாவது சொன்னால், விகல் பமாகும். உன்னிடம் சொன்னேன் என்கிற மனச்சாந்தி உண்டாகி றது!

'பொது எதிரி சீனு எக்காளமிடும் இச்சமயம் பூரண ஒத்துழைப்புதரும் தி.மு.க மீது ஆள்வோர் பாய்வதேன் தேவையா! அவசியமா! இதுதான் நன்னெறி பரவும் வழியா!!

தேவையா?

அடுத்த வீட்டுப் பிள்ளையை விடத் தன் பிள்ளை இளைத்துவருகி றது என்பதற்காக அடுத்த வீட் டுப் பிள்ளை சாக வேண்டும் என சண்டாளன்தானே ஆசைப்படு வான்? எதிர் வீட்டுக்காரி அழகி என்பதற்காக அவள் முகத்தில் திராவகத்தை வீசி அசிங்கப்படுத் த நினைக்கலாமா? இது எப்படி 'கிரிமினல்' குற்றமாகுமோ அது போல வேண்டுமென்றே ஒரு எதிர்க் கட்சியைத் தடை செய்வ தும் 'கிரிமினல்' குற்றம்தானே!

எருக்கம் பூ மணக்குமா? திரா விட முன்னேற்றக் கழகம் மணக் கிறது என்றால், அது எருக்கம்பூ அல்ல என்றுதானே என்ன வேண்டும்?

காமராசருக்குக் கழகம் என் றாலே நடுக்கமாயிருக்கிறது! கார ணம் எனக்குப் புரியாமலில்லை, பதவியாசைதான். இதை சென் னையில் பேசும்போது நாருக்காக "காமராசரின் அருகில் நிற்கவே கூச்சமாயிருக்கிறது. ஏனெனில் அவர் ஒரு மேதை," என்றுவது மனந்திறந்து சொல்லிவிடவேண் டும், அப்படிச் சொல்லாவிட்டால்

போகிறேன் டில்லிக்கு! தென் றலே, குமரியே, உன் அளவுக்கு என் மனம் பக்குவப்படவில்லையே என்கிற வேதனையோடுதான் போகிறேன்!!

—0—

விஞ்ஞான விழா!

- கா. வேழவேந்தன் பி. ஏ., பி. எல். -

1. பழம் பாய்கள், முறங்கள், கூடை
   பயனில்லாப் பொருள் சேர்த்து
   அழலிலே பொசுக்கிப் போக்கி
   அழிப்பதே 'போகி' என்பேம்
   விழவிலே விஞ்ஞானத்தை
   வியத்தகு முறையில் அன்று
   நுழைத்தவர் யார் யார் என்றே
   நுவலுங்கள் 'போகி' தன்னை!

2. மண்ணக உயிர்கள் யாவும்
   வாழுவதே கதிரால் தானே!
   மண்ணகப் பயிர்கள் எல்லாம்
   வளர்வதே கதிரால்தானே!
   எண்ணினர் திராவிடத்தார்
   எடுத்தனர் விழாவை! அதைக்
   கண்கண்ட பரிதி போற்றிக்
   களிப்பதே 'எழிலார் பொங்கல்!'

3. உழுபடை தாங்கிச் செல்ல
   உயிர் மூச்சாய் இருக்கும், தீய்க்கும்
   அழல்வெயில் தன்னில்கூட
   அயராது உழைக்கும்; அந்தப்
   பழியிலா விலங்கைப் போற்றிப்
   பாராட்ட வேண்டாமா? காம்?
   விழாவொன்று எடுத்தோம், அதே
   வீறுள்ள 'மாட்டுப் பொங்கல்!'

4. ஓரிடம் செல்வக் குன்றம்;
   ஓரிடம் வறுமைப் பள்ளம்
   சீரின்றி அமைந்திருந்தால்
   செழிக்குமா சமூகம்? செல்வப்
   போர் உள்ளோர் நிறைந்திடச் சென்று
   பொருள்பெறக் காணுகின்ற
   சீரியநாளே நாளோர்
   செப்பிடும் 'காணும் பொங்கல்!'

ஜெயடி


இனத்துரோகம்

தொடர்ச்சி)

பெரிய மனுஷனுகப் போறீயா:'' என்ருன். நாயருக்கு வம்பைவிட பெரிய மனுஷனுவதிலேயே ஆசையிருந்தது.

இதற்குள், "ஓகோ! கொலே செய்ய இங்கே வர்ற அளவுக்கு ஒரு துணிச்சல் வந்துவிட்டதா?'' என்று அம்பிகா தன்னுடைய வீரத்தை மெச்ச வேண்டும் என்று சண்டைக்குப் போனுர் செட்டியார். அம்பிகாவும் சீறினுள். அவர்களிடம் அமைதியாகப் பெருமாள் விளக்கினுன். வேண்டுமானுல்ஒட்டல் மானேஜர் நாயரைக் கேளுங்கள் என்ருள்.

"செச்செச்சே! ஆயிரம் ரூபாயாவது, பாக்கியாவது. அதெல்லாம் ஒண்ணுமில்லே. பெருமாள் ஏதோ கூப்பிட்டாரேன்னு வந்தேன். கர்ணபூபதி, என் ஓட்டலிலேயிருந்தது எங்களுக்கு எவ்வளவு பெருமை'' என்று நாயர் சொன்னுர். பெருமாளுக்கு ஒன்றும் புரியவில்லே! கண்ணப்பன், மனதுக்குள் சிரித்தபடி நின்ருன். கல்தா கொடுக்காததுதான்பாக்கி! தன் வீட்டுப் பக்கம் தலேகாட்டக் கூடாது என்று திட்டி பெருமாளே அனுப்பினுள், அம்பிகா!!

சிலநாட்கள் சென்றன, ஜமீன்தார் சீதாவை 'இரகசியமாக' பதிவுத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகப் பேசப்பட்டது! யாருக்கும் தெரியாமல் காரியத்தை முடிக்க வேண்டும் என்பதில், கண்ணப்பனேவிடச் செட்டியார் அதிக அக்கரை காட்டினுர். செட்டியாரைவிட, சீதா அதிக சிரத்தையெடுத்துக் கொண்டாள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலட்சியம் நாயர் தயவால் கைச் செலவுக்கும் பணம் புரட்டிக் கொள்ள முடிந்தது.

திருமணமும்முடிந்தது! விருந்து நடந்தது. பட்டணத்தில் தன்னேப் போல இடியட்! ராஸ்கல்! கெட் அவுட்! என்று தினசரி பட்டம் வாங்கிக் கொண்டிருக்கும் ஐம்பது அறுபது பேர் புடைசூழ, தலேமை வகித்து முன்னே வந்தான் கண்ணப்பன். 'இதெல்லாம் யார்? அசிங்கம்பிடித்த பயல்கள்!' என்ருள் அம்பிகா. செட்டியாரும் "மிஸ்டர் மாப்பிள்ளே! உங்க வேலேயாள் கண்ணப்பன் ரொம்ப மோசம், அவனே நீங்க 'டிஸ்மிஸ்' செய்யணும்'' என்ருர். பெரிய ஜமீன்தாரைக் கலியாணம் செஞ்சிருக்கோம் நம்ப மகளுக்குஎன்று மற்றவர்களிடம் சொல்லாமல் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த அம்பிகாவுக்கும் கோபம் கோபமாய் வந்தது.

வந்தகண்ணப்பன் நேரே டெலிபோனிடம் சென்ருன்! "சார்! அம்பிகா வீட்டிலே யாரோ ஒரு பய கண்ணப்பன்கிறவன ஏழை எளியதுகளோடு வந்துகலாட்டா செய்ருன்'' என்று அவனேபுகார் செய்தான்!! ஓடிவந்த கர்ணபூபதி "என்னடா! இதெல்லாம்'' என்று கேட்டான்.

•

"டேய்! எனக்கு ஒரே ஒரு உதவி செய்யணும்! அப்பதான் எனக்கு மனநிம்மதி வரும். தவறு பொய், இதிலே ஈடுபட்டவன் நான். நான் தண்டிக்கப்பட வேண்டியவன்என்ன நான்சொல்றபடிசெய்றியா!'' என்றுகாதோடு காதாய் ஏதோ சொன்னுன். சர்ணபூபதி திகைத்தான்! "திகைக்காதேடா! நீ இன்னேயிலேருந்து பெரிய மனுஷன் பட்டியலிலே அடியெடுத்துவைக்கிறே மனச்சாட்சியை விக்கப் பழகிக்கோ!'' என்றுமுதுகில் தட்டியபடி சொன்னுன் கண்ணப்பன்.

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! இவன் என் வேலேக்காரன். குடித்துவிட்டு வந்து கும்மாளம் போடுகிருன். இவனே இழுத்துக்கிட்டுப் போங்க...'' என்று கர்ணபூபதி சொன்னபோது, அவன் குரல் நடுங்கியது. கண்களிலும், நீர் நிரம்பியது. செட்டியார் வைத்திருந்த 'பாட்டிலில்' ஒன்று முதன்முதலாக கண்ணப்பன் வயிற்றுக்குள்ளும் மீதி பைக்குள்ளும் கிடந்தது!!

"இந்தப் பசங்க...'' என்ருர், மற்றவர்களேக் காட்டி செட்டியார்.

"பாவம்! சாப்பிட்டுப் போகட்டும்...'' என்று ஜமீன்தார் தோர

(18-ம் பக்கம் பார்க்க)

தியாகம்

"......வண்டி நகர்ந்தபோது முன்னுல் பாண்டு வாத்தியம் முழங்கிக்கொண்டு சென்றதைக் கண்டேன். பாண்டை ஏன் அழைத்து வத்தீர்கள் என்று தத்தாவைக் கேட்டேன். என் விடுதலேயைக் கொண்டாட என்று அவர் பதிலளித்தார். எனக்கு இது பிடிக்கவில்லே. இது கொண்டாடுவதற்கான தருணமல்ல என்று அவரிடம் சொன்னேன். நான் விடுதலேயானது உண்மைதான். ஆனுல், ஆயிரக்கணக்கான என் நண்பர்களும் சகாக்களும் இன்னும் சிறையிலிருந்தார்கள்.

என் வேண்டுகளின் பேரில் பாண்டுவாசிப்பதை நிறுத்தி அவர்களேப் போகச் சோன்னுர்கள். ஹௌரா பாலத்தின் மீது என் கார் போய்க்கொண்டிருக்கையில் பழையகாலநினேவுகள் மனதிற்கு வந்தன. காரியக் கமிட்டி, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களில் கலந்துகொள்வதற்சாக மூன்று ஆண்டுகளுக்கு முன் பம்பாய்க்கு நான் கிளம்பிய தினம் ஞாபகத்துக்கு வந்தது. வீட்டு முன்வாசல் வரை என் மனேவி வந்து எனக்கு விடை கொடுத்து அனுப்பினுள். மூனறு ஆண்டுகள் கழித்து நான் இப்பொழுது திரும்புகிறேன். ஆனுல், அவள் கல்லறையில் உறங்குகிருள். என்வீடு சூன்யமாக இருக்கிறது. வெர்ட்ஸ்வொர்த்தின் வரிகள் நினேவுக்கு வருகின்றன,

"ஆ, அவள் கிடக்கிருள் கல்லறையில்—

என் வாழ்வில்தான் என்ன மாறுதல்!''

காரைத் திருப்பிவிடுமாறு கூட இருந்தவர்களேக் கேட்டேன்! வீட்டிற்கு போவதற்கு முன் அவளது கல்லறைக்குச் செல்ல விரும்பினேன். கார் நிறைய மாலேகளாக இருந்தது. ஒன்றை எடுத்து அவளது கல்லறையின் மீது வைத்தேன். மௌனமாக 'பத்தேஹா'வை ஓதினேன்.,'

ஆசாத்

'இந்திய விடுதலே வெற்றி' நூலில்

"சந்தா விவரம்"

அதிகப் பிரதிகள் வேண்டுவோர், ஒவ்வொரு செவ்வாய் கிழமைக்குள்ளும், தெரிவிக்கவும். முன பணத்தோடு வருபவைகளே, முதலிடம் பெறும்.

சந்தாவிபரம்

* * *

ஓராண்டு - ரூ. 8-00

அரையாண்டு- ரூ- 4-50

*** ஆசிரியருக்கு எழுதுவோர், அவர் பெயரிட்டும் பொறுப்பாளருக்கு எழுதுவோர், 'பொறுப்பாளர் அறப்போர்' எனவும், எழுதுக.

அறப்போர் சென்னே-18

சிறுகதை

"ஊருக்கு ஒரு விளக்கு."

ச. அமுதன்.

சட்டம் படித்துவிட்டு சுந்தரேசன் பம்பாயிலே பெரிய வக்கீலாக இருக்கிருன்; மருத்துவக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு கோதண்டபாணி டாக்டராகி விட்டான், பொறியியற் கல்லூரியிலே படித்து ஏழெட்டுப்பேர் எஞ்சீனியர்களாகி விட்டானர். பட்டம்பெற்றவர்கள் இன்னும் எத்தனையோ பேர். கவிஞனுகக் காட்சியளிக்கும் கோமேதகம், திரைப்பாடகனுகப் பிரபலமடைந்துவரும் செல்லக்குட்டி, அரசியலில் செல்வாக்கு பெற்று பொதுப்பணியில் ஈடுபட்டிருக்கும் குமாரவேல், தாசில்தார் சிவக்கொழுந்து—இப்படிப் பல்வேறுபட்ட மனிதர்கள், இவர்களெல்லாம் ஒருகாலத்தில் ஒரு காலத்தில் இந்த ஆத்தாளூர் ஆரம்பப்பள்ளியில் படித்துவிட்டுச் சென்றவர்கள்தாம். குறையாத கல்விச் செல்வத்தின் களஞ்சியமாய், வற்றாத காவிரியின் பெருமை கொண்டதாய் விளங்கும் ஆத்தாளூர் பாடசாலை அன்றும் ஆரம்பப்பள்ளிதான், இன்றும் ஆரம்பப்பள்ளிதான். அங்கே படித்தவர்கள் மட்டும்துறைகளில் உயர்ந்து நிற்கும் உத்தமர்களாகத் திகழ்கிருர்கள்.

சாம்பசிவ வாத்தியார் என்ருல் அந்த ஊருக்கு ஒரு கற்பகத்தரு; அறிவுச் செல்வத்தை அள்ளி அள்ளித்தரும்காமதேனு; இப்படியெல்லாம் ஆத்தாளூர் மக்கள் நேரம் வாய்க்கும் போதெல்லாம் வாய் திறக்கும் போதெல்லாம் பேசிப் பெருமையுற்ருர்கள், சாம்பசிவ வாத்தியாரிடம் படித்த மாணவன் நான்' என்று மூலைக்கொருவராய் பேசிக் கொண்டிருக்கும் மாணவர்கள் ஆயிரக் கணக்கானேர். பெரிய பதவிகளில் இருப்பவர்களெல்லாம் என்னிடம் படித்தவர்கள் என்று சாம்பசிவ வாத்தியார் சொல்ல மறந்தாலும் அவரிடம்கற்றமாணவர்கள்சொல்லிச் சொல்லிப்பெருமையையடையத் தவறுவதில்லை. அந்தப் பெருமை மொழிகளைப் பற்றிப் பிறர் சொல்லக் கேட்கும் போதெல்லாம் சாம்பசிவ வாத்தியாரின் கண்களில் இன்ப நீர்த் திவலைகள் இமையோரங்களை முத்தமிட்டு நிற்கும்.

அறுபது வயதுதான் என்ருலும் எண்பது வயது மதிக்கத் தக்கக்கிழப் பழமாகக்காட்சிதருகிருர் சாம்பசிவ வாத்தியார், ஆத்தாளூர் பாடசாலைக்கும் அவருக்கும் இருக்கிற தொடர்பு இன்னும் விட்டுப் போய்விடவில்லை. ஆத்தாளூர் மக்களும் அந்த நிலைக்கு விட்டுவிட மாட்டார்கள், ஆனல் உழைத்து உழைத்து அறிவுச் செல்வங்களைநடமாடவிட்ட சாம்பசிவவாத்தியார் கண்ட சாதாரண உலகத்து வாழ்க்கைப் பயனே?

அவருடைய பெருஞ்சுமைகள் யாருக்குத் தெரியும்? வீட்டிலோ திருமணக் காட்சிக்குத் தயாராக நிற்கும் அருமை மகள் கோமதி; உள்ளத்திலோ ஓராண்டுக்குப் முன்னலே வீட்டைவிட்டு வெளியேறி காணமல் போய்விட்ட அன்புமகன் சூரியாவின் நினைவுச் சுமைகள், கோமதிக்கு நல்ல இடத்திலே திருமணமாகி அந்த இனிய காட்சியை சாம்பசிவ வாத்தியார்கண்குளிரக் காணவேண்டுமென்று ஊரெல்லாம் வாழ்த்தியது. கோமதி, தன் தந்தையின் தள்ளாத வயதையும் வறுமை நிலையையும் எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்தாள். காணமற்போன அண்ணனை நினைக்கும் போது துக்கம்நெஞ்சை அடைத்தது. மொட்டாகி, பூவாகி, பிஞ்சாகி, காயாகி, கனியாகி நிற்கும் கோமதியின் பருவத் தோற்றம் 'எப்போதப்பா திருமணம்?' என்று கேட்பது போலிருந்ததுசாம்பசிவ வாத்தியாருக்கு. எத்தனையோ பேருக்கு ஏணியாகப் பயன்பட்ட வாத்தியார், தன் மகனைப் படிக்க வைத்து பதவியிலமாத்த முடியவில்லையே என்று அழுது கண்ணீர் வடித்தார். கோமதியை மட்டும் ஏதோ படிக்க வைத்தார். ஆத்தாளூர் பள்ளியில் அவளும் தன் தந்தையின் தொழிலையே மேற்கொண்டாள். தந்தையின் பெருமை காக்க கோமதி ஆத்தாளூர் பள்ளிக்கு திருவிளக்காய் வந்துவிட்டாள் என ஊர்மக்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். சாம்பசிவ வாத்தியாருக்கு இது ஒரு வகையில் மகிழ்ச்சியைத் தந்தது. இந்நேரம் மகன்மட்டும் இருந்தால்?—

அந்த அறிவுக் களஞ்சியத்தின் உள்ளம் ஏதோ ஒரு சுமையால் அழுந்திப் போயிருந்தது. கோமதிக்கு ஒரு நல்ல வரனைப்பார்த்து ...ம்...தேடியலைய உரமா இருக்கிறது உடலில்? அதை நினைத்து நெஞ்சத்தோடு வைத்துக்கொண்டார். 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்றே இருந்தார். தள்ளாடும் வயதினைச் சுமந்து கொண்டு தள்ளாடி நடந்துவரும் உடலம் சாம்பசிவ வாத்தியரைக் காட்டினுள் கம்பமாகக் காட்சியளிக்க வைத்தது, குழலினும் யாழினும் மேம்பட்டகுரலார்களைக் கவனிக்கும் ஆத்தாளூர்பள்ளியின் பொறுப்புகோமதியின் மேல்விழுந்தது. சாம்பசிவ வாத்தியார் வீடே வாழ்வென ஆகிவிட்டார்.

காணமல்போனசாம்பசிவவாத்தியாரின் மகன் வீடுவந்து சேர்ந்தான். வறுமைக்கு உரிமை பாராட்டிக் கொண்டிருக்கும் தந்தையை மகிழவைக்க தேடிவந்த செல்வத்தைக் கொண்டுவந்து சேர்த்தான். தங்கை மணமாலை சூடும் மலராகி நிற்பாள்என்பதை எண்ணிதங்கைக்குமணமகனைத் தூரத்து உறவினன் நந்தாவையும் அழைத்து வந்தான்.

அண்ணனைக் கண்டாள் கோமதி. கண்களைப் பொத்தி விம்மலை அடக்கிக் கொண்டு அண்ணனின் காலடியில் வீழ்ந்தாள். சூரியாவின் மனம் தன் தவறை எண்ணி வேதனைப் புயலால் தாக்குண்டது. எந்தச் சமாதானத்தைச் சொல்லித் தேற்றுவது? சுற்று முற்றும் பார்த்தான். கண்ணீரால் முகம் நனைத்தான்.

ஏன், வீடு பொலிவிழந்து தோன்றுகிறது? வீடு மட்டுமா? ஆத்தாளூர் பள்ளிக்கூடம்! ஆத்தாளூர் பள்ளிக்கூடம் மட்டுமா? —களைகெட்டுக் கிடக்கும் ஆத்தாளூரில் யார் இல்லை? கோமதி—நந்தா வாழ்வுத்தோட்டத்தைக் காண. சூரியாவைக் காண — சாம்பசிவ வாத்தியார் இல்லை.

1

2

3



4

இவைகள் என்னென்ன?

விடை 18-ம் பக்கம்

நல்ல தமிழ் மகன்

இ. ஆ. பெ. விசுவநாதம்

அறிஞர் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இந்நாட்டின் செல்வம். ஒரு நல்ல தமிழ் மகன். 18?6-ல் பிறந்தவர். அவர் மறைந்த ஆண்டு 1?89. அறுபத்து மூன்று ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்தவர். பிறந்த ஊர் வேளாண் குளத்தூர். இது திருச்சியை அடுத்துள்ளது.

அறிஞர் வேதநாயகம் ஆங்கில அறிஞனாக, தமிழறிஞனாக, சட்ட அறிஞனாக, மொழி பெயர்ப்பு அறிஞனாக, நீதிபதியாக, இசைப் புலவனாக, நூலாசிரியனாக, கதாசிரியனாக, ஒழுக்கசீலனாக திகழ்ந்தவர். சுருக்கமாகக் கூறவேண்டுமானால் அவரது அறிவும், திறமையும் பிறரது உள்ளத்தே பதிந்திருந்தது எனக் கூறலாம்.

அவர் காலத்திய நீதிபதிகள் திவான் ரகுநாத ராவும், ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயரும் ஆவர். அவர் காலத்திய தமிழ்ப் புலவர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும், சி. வை. தாமோதரம் பிள்ளையும் ஆவர். அவர் காலத்திய இசைப்புலவர் தியாகையர்வாளும், முத்துசாமி தீக்ஷிதர்வாளும்.

திருச்சி மாவட்ட நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகவும், தரங்கையில் சீகாழியில் நீதிபதியாகவும் வேலை பார்த்தவர். ஓய்வு பெற்று மாயவரத்தில் இருந்த போது மாயூரம் நகரமன்ற தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்று பொதுத் தொண்டு செய்வது எப்படி? என்பதை பொதுமக்களுக்கு முதல் முதலாகச் செய்து காட்டிய பொதுமக்களின் தலைவரும் அவரே யாவர்.

அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே தமிழ் மொழியில் முதன் முதல் வெளிவந்த நாவலாகும். சட்ட நுணுக்கங்களைப்பற்றி முதன் முதலில் தமிழில் எழுதி வெளியிட்டபெருமை அவரையே சேர்ந்தது.

* * *

மறத்தற்கியலாத நாயகம்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை

அவரை உரை நடையின் தந்தை என்று கூறுவது மரபு. அவர் உரைநடையின் தந்தைமட்டுமல்ல. புனைகதையின் தந்தை. நகைச்சுவைக்கு முன்னோடி. நீதிபதிமட்டுமல்ல, நீதி நூல் தந்த நீதி நாயகம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டு தமிழின் பழமை தளர்ந்த நூற்றுண்டு. ஆங்கிலத்தின் புதுமைப் பொலிவுருத நூற்றுண்டு. தமிழின் மறுமலர்ச்சியில் பழமைப் புகழ் தளிர்த்துப் புதுமை மணம் பூத்த இருபதாம் நூற்றுண்டல்ல அது. ஆயினும் அந்த இருபதாம் நூற்றுண்டின் கருவாக இயங்கிய பல அறிஞர் அன்று நிலவினர் அவர்களிடையே வேதநாயகமும், வள்ளலாரும் குறிப்பிடத் தக்கவர்கள். வேதநாயகத்தினிடம் இருபதாம் நூற்றுண்டின் ஒளியை மட்டுமின்றி, வர இருக்கும் இருபத்தொன்ரும் நூற்றுண்டின் ஒளியைக்கூட கருநிலையில் காணலாம். நாம் இன்றடைந்துள்ள புது மலர்ச்சியின் முன்னேற்றக் கண்கொண்டு பார்த்தால், நாம் இன்னும் அடைய வேண்டிய அரும் புது மலர்ச்சியின் அரும்புகளைக்கூட அவரிடமிருந்து பெறலாம்.

இவ்வளவு சிறப்புடைய நூல்களை அவற்றின் தகுதியளவு இன்றைய பள்ளிகளில் ஏனோ பாடமாக வைப்பதில்லை! நூல் எழுதுபவர் குற்றமா, வெளியீட்டாளர் குறையா, அரசியலார் அசட்டை மனப்பான்மையா? யான் அறியேன்!

கீர்த்தனையில் ஒரு இடம்

"கையிலே பிடிப்பது ஜெபமாலை
கக்கத்தில் வைப்பதுவோ கன்னக்கோலை
மெய்யாகத் தினம் படிப்பது தர்மநூலை
மேலும் மேலும் நமக்குத் துன்பமார்க்கவேலை"

அவர் நகைச்சுவை

"ககனப்பூ வந்தமகன் கொய்தானும்—அதைக்
கண்டு குருடன் அம்பால் எய்தானும்
செகமிசை ஊமையனும் வைதானும்—அதைச்
செவிடன் கேட்டு நகை செய்தானும்"

கண்டனம்

"ஏதுக்கோ வாங்குகிறீர் லஞ்சம் உமக்
கிதைவிட மேலுண்டோ பஞ்சம்?
வாதுக்கு வீணே வழக்குரை பேசி
வாங்குகிறீர் என்ன பிழைப்பிது, சீச்சீ!"

முனுசீப் அனுபவம்

"சுப்பையரோ அபந்த மூட்டை—அந்தச்
சுந்தரையர் வழத்கிலோ தொளாயிரம் ஓட்டை
அப்பையர் கற்பிப்பார் பொய்ச்சீட்டை அந்த
அனந்தையர் கட்டுவார் ஆகாசக்கோட்டை"

•

"அண்டப் புரட்டர் அந்தவாதி—அகி
லாண்டப் புரட்டன் அபபா அவன் பிரதிவாதி
சண்டப் பிரசண்டன் நியாயவாதி நாளும்
சகஸ்திரப் புளுகன் சாட்சிக்காரனெனும் கியாதி"

ஃ

"நானே பொதுநீதித்தானே செலுத்திட
நல்ல வரம் அருள்கோனே
வரும் வழக்கர் மனத்தை
ன்சொற்களால் சுடாமல்
மற்றைக் கீழ் உத்தியோகஸ்தர்
வம்புக் கிடங்கொடாமல்
தரும தேவதை ஞாய
தலந்தனில் நடிக்க
தப்பு சாட்சிகள் கிடு
கிடெனவே துடிக்க
இருமையகல் அநீதியே
ஓட்டம் பிடிக்க
இலஞ்சம் வாங்கிகள்
வெட்கத்தால் உயிர்மடிக்க (நானே...)

* * *

தமிழ் வேதநாயகர்

திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியா

மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் கிட்டத்தட்ட ஒரு நூற்றுண்டுக்கு முன் 'சிப்பாய் கலகம்' நிகழ்ந்த காலத்தில் (கி. பி. 1857) தரங்கம்பாடியில் முனிசீப்பாக இருந்துவந்தார்கள். முனிசீப் என்றால் நீதிபதி ஸ்தானத்தைப் போல அந்தக் காலத்தில் மதிப்பு அதிகம். பொறுப்பும் அதிகம்.

மற்றும் அவர் தமிழைப் பற்றிக் கூறுகையில் 'பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளைப்பயிறு விட்டு தாய்மொழியாகிய தமிழை பயிலாதவர்கள் மாதா வயிரெறிய மகேசுவரி பூசை செய்பவர்க் கொப்பாவார்' என்று கூறுகிருர். 'நம்மைப் பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ்; நம்மைத் தாலாட்டி தூங்க வைத்ததும் தமிழ், வீட்டு மொழியும் தமிழ், நாட்டு மொழியும் தமிழ்''...

அந்தக் காலத்து தமிழ் நடை கண்டு அவர் மனச்சான்றுசொல்லுகிறது. அந்தகாலத்து மக்கள் 'துரைசாமி' என்பதைத் 'தொரைசாமி' என்று சொல்லுவார்கள். 'சுப்பிரமணியன்' என்பதை 'சொக்கிரமணியன்' என்பார்கள் ,வைத்தியலிங்கம்' என்பதை 'வயித்தியலிங்கம்' என்றும் 'வைத்துலிங்கம்' என்றும்கூடப் பெரிய மனிதர்கள் எழுதிவந்தார்கள். அதைப்பார்த்து 'இந்த வித்துவ சிரோன்மணிகள், ஜூரிகளாகவும், பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டுகளாகவும் நியமிக்கப்படுகிருர்களே!'' என்று வருந்திக் கூறினர்.

ஒரு கோர்ட்டில் கட்சிக்காரர்கள் தமிழர்களாயிருந்து, வக்கீலும் நீதிபதியும் தமிழ்ப் பேசக் கூடியவர்களாக இருப்பார்களானல் என் வழக்கு தமிழிலேயே நடக்கக் கூடாது? என்று அவர் அந்தகாலத்திலேயே கேட்டுள்ளார்.

—0—

'தி. மு. கழகத்தில் நான் ஓர் உறுப்பினன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையும், பூரிப்பும், அடைகிறேன்!' - புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்

ஒரு நடிகன் காங்கிரஸ்காரனாக இருக்கலாம், கம்யூனிஸ்டாக மாறலாம், சோஷலிஸ்டாக ஆகலாம் ஐயோ, தி. மு. க. வாக மட்டும் இருக்கக்கூடாது. இப்படித்தானே இன்றைய கலையுலக நண்பர்களிற் சிலர் எண்ணுகிறார்கள்.

'நடிகன் என்று இருந்தால் எந்தப் படத்திலும் நடிக்க வேண்டியதுதான். கொள்கைகளை அவர்கள் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும்' இதுவும் ஒரு அறிவுரை.

ஆம், வீட்டில் ஒரு கொள்கையும், தொழிலுக்கு ஒரு கொள்கையும், வெளியில்—ஒரு கொள்கையும் கொண்டவர்கள் தமிழகத்தில் சிறப்புடன் இருப்பதால்தானே, தமிழகம் இழிந்த நிலையில் தமிழர்கள்——கலைஞர்கள் உட்படத்தான்—— கேடபாரற்று, உலகத்தின் மத்தியில் நாதியற்றோராய்க்காட்சியளித்துக்கொண்டிருக்கிறார்கள். 'சிறு குழந்தைகள்கூட தமக்குப் பிடிக்காத தின்பண்டத்தை ஊட்டினால், துப்பிவிடுமே' என்று அருமையாகக் கூறியுள்ளார் அறிஞர் அண்ணா. ஆனால், இவர்களோ, நடிகனை அறிவில், சிறு குழந்தையைவிடக் கீழ்நிலையில் இருக்கச் சொல்கிறார்கள்.

சிகிரெட் செய்யும் இயந்திரம் ஒன்று, அந்த யந்திரத்தின் ஒரு பகுதியில், புகையிலையையும் காகிதத்தையும், கொடுத்துவிட்டால் அவை யந்திரத்தின் பல இடங்களிலே சுற்றி, கடைசியாக மற்றொரு பக்கத்தில் நாம் உபயோகப்படுத்தும் சிகிரெட்டாக மாறி வெளியே வரும்பொழுதே வரிசையாக அடுக்கிவிடுமாம். ஆனால் அந்த சிகிரெட்டுகளில், ஏதாவது ஒன்றில் அந்தக கம்பெனியின் பெயர் அச்சடிக்கப்படாமல் இருந்தால், அதைத் தனியாக ஒதுக்கி கீழே தள்ளிவிடுமாம். யந்திரம் கூட தவறானவற்றை ஒதுக்கும் இந்தக்காலத்தில், யந்திரத்திலும் கேவலமாக்குகிறார்கள் நடிகனை. எவ்வளவு தவறுகள் கண்டாலும் அவன் வாய்மூடி ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்!

பணம் கொடுத்தால் நடிக்க வேண்டியதுதானே என்றால் சமுதாயத்தில், பணம் வாங்குவதற்காக, வாங்குகிறவர்கள் எதையும் செய்யலாம் என்றாகும். அதை அவர்கள் ஒப்புக்கொள்வார்களோ என்னவோ நானறியேன்.

ஆகவே, 'கலை' என்பது கருத்தற்ற உலகில், சத்தற்ற உரைகளைப் பறிமாறிக் கொண்டிருப்பதல்ல, மக்களுக்கும் சமுதாயத்துக்கும் அப்பாற்பட்டதல்ல. கலை மக்கள் வாழ்வில் முக்கியமான ஒரு பகுதி. கலையின் மூலம் கருத்துக்கள் பரவுவது தவறல்ல. ஆனால் பரப்பப்படும் கருத்துக்கள், நாட்டிற்குத் தேவையானதாக சமூகத்தைப் புதுப்பிப்பதாக மக்களை முன்னேற்றுவதாகயிருக்கவேண்டும்.

'கலைஞன்'—கலைஞன் என்ற பட்டியலிலே இடம் பெறும் நடிகன், நிச்சயமாக ஒரு கொள்கையைக் கொண்டவனாக விளங்க வேண்டும். தான் சரியென்று நம்பும் கொள்கையை, பிறருக்குச் சொல்ல முயலவேண்டும். பிறர் நலத்தைப் பாதிக்காத அளவில முடிந்த அளவு தன்னுடைய, கலையை நிச்சயமாக அதற்குப் பயன்படுத்த வேண்டும்.

நடிகன் பொது மக்களோடு தொடர்பு கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நடிகர்கள் 'காட்சிப் பொருள்கள்' என்ற நிலை மாறி, மக்களின் மனதிலே மதிப்புவாய்ந்த இடம் கிடைக்கும். கலைஞன் மக்கள் சமுதாயத்திலே ஒரு அங்கம். மக்களுக்கு ஏற்படுகிற இன்ப துன்பங்கள் அவனுக்கும் உண்டு. அதுவும் ஜனநாயக யுகத்திலே வாழும் நாம், அரசை ஆக்கவும் அழிக்கவும் சக்தி பெற்ற ஓட்டுரிமையைக் கொண்டுள்ள நாம், அரசியலில் கவலைப்படவில்லையென்றால் நாட்டிலே இருக்க வேண்டிய ஆட்சி பற்றி அக்கரையற்று இருக்கிறோம் என்பதுதான் பொருள்.

இந்த நிலையில் கலைஞர்கள், கலந்து பணியாற்ற தகுதியும் உரிமையும் உள்ள கட்சி, தி. மு. கழகம்தான்! தி. மு. கழகம்தான் தமிழகத்துக்காக தமிழ் மக்களுக்காக தமிழ் மொழிக்காக தமிழ்க் கலைக்காக தமிழர் நாகரீகத்துக்காகப் போராடுகிறது. கலைஞர்களிடத்தில் நீங்காத பற்றுக்கொண்டது தி. மு. கழகம்தான். தி. மு. கழகத்தை தோற்றுவித்த அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் தலைவர் மட்டுமல்ல, கலையுள்ளம் படைத்த அரசியற் கலைஞர். இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த இயக்கத்திலும் இல்லாத சிறப்பான சக்தி தி. மு. கழகத்திற்கு அரசியற் கலைஞராம் அறிஞர் அண்ணா காப்பாளராக இருப்பதுதான். ஆகவேதான் கலைஞர்களை தன்பால் ஈர்க்கும் சக்தி அண்ணாவுக்கும் கழகத்திற்கும் இருக்கிறது. எனவே, 'தாயக விடுதலைக்காகப் போராடும் பெரும் படையாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் ஓர் உறுப்பினன்' என்று சொல்லிக் கொள்வதிலே பெருமையும், பூரிப்பும் அடைகிறேன்.

—:o:—

முரசே முழங்கு

(சுவாமி இராமதாசர் — பினாங்கு)

...:o:...

முழங்கு தமிழ்முரசே—தமிழ்
வீரர்கள் கேட்டு விரைந்து வருவண்ணம் [முழங்கு

விண்ணதிர முழங்கு—முரசே
வெற்பதிர முழங்கு
மண்ணதிர முழங்கு—தமிழர்
மனங்குமுற முழங்கு
கண்ணதிர முழங்கு—ஆண்மை
கான்றெழவே முழங்கு
பண்ணதிர முழங்கு—வீரர்
பாய்ந்தெழவே முழங்கு (முழங்கு)

வானதிர முழங்கு—முரசே
மாண்புயர முழங்கு
காணதிர முழங்கு—சீனக்
களமொழிய முழங்கு
கோனதிர முழங்கு—கம்யூனிசக்
கொடுமைகெட முழங்கு
மீனதிர முழங்கு—தமிழர்
வெற்றியுற முழங்கு

* * *

அறப்போர்

"நாயைப்போல நன்றியுள்ள பிராணியுமில்லை! அது கடித்தால் மீள்வதற்கு இந்த உலகில் மருந்தும் இல்லை"--தன் வாழ்வின் சோகச்செய்தியை சொல்கிறார்- முல்லை. சத்தி

நீத்தி, தத்தி, நடக்கும் பருவம்

தத்தை மொழிப் பேசும் வயது.

பிஞ்சு கரங்களிலே, ஒரு சின்னஞ்சிறு நாய்க்குட்டி. நெஞ்சிலே மகிழ்ச்சியின் துள்ளல். தூக்க முடியாமல் தூக்கி நடக்கிறான்—

சுறு சுறுப்பான நடை, குரு குருப்பான கண்களிலே, மகிழ்ச்சியின் வாடை!

அம்மா கேட்டார், 'ஏதடா, ராஜா, இந்த நாய்க் குட்டி?'' என்று.

''தெருவிலே இருந்திச்சி' மழலை மொழியிலே பதில் வந்தது! அவன் மான் விழிகளிலே ஆனந்தப் பிரவாகம்! வார்த்தைகளிலே இதயத்தின் இன்பம்!

அன்னை அவனை உச்சிமோந்து முத்தமிட்டாள். அவன் செய்கையை மெச்சினாள். அவனோ நாய்க்குட்டியை முத்தமிட்டான். அதன் அங்க அசைவுகளை மெச்சினான். அம்மா அவனைக் கொஞ்சினாள், அவனோ நாய்க்குட்டியைக்கொஞ்சினான். பால் உண்ணும்போதும் படுத்துறங்கும் போதும் அது அவன் பக்கத்தில் அது உண்டபோது அவன் உண்டான், அது உறங்கியபோது அவன் உறங்கினான். அது அழுதால் அவன் அழுதான், அது விளையாடினால் அவன் விளையாடினான்!

*

காலன் என்ற திருடன் வருடங்களை விழுங்கிக்கொண்டே ஓடினான். அவன் நெடுமரம் போல் வளர்ந்தான். பரந்த மார்பு, விரிந்த தோள்கள். உருண்டு திரண்ட கரங்கள், கால்களோ தூண்கள்! அன்னையோ அவனைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டாள், அண்ணன்மார்களோ பெருமையும் பூரிப்பும் கொண்டனர். அந்த சின்னஞ்சிறு குடும்பத்தின் சிங்கார அகல் விளக்கு அவன். முல்லைக் கொல்லையில் எழில் மலர்!

அண்ணன்மார்களை நாட்டுக்கு 'தத்தம்' செய்துவிட்டு குடும்ப பொறுப்பை சுமந்தான். சின்னஞ்சிறு வயதுதான். பெரும் பொறுப்பைத் திறமையாக நிர்வகித்தான் அவனுக்குத் தெரியாத தொழில் இல்லை, புரியாத வேலை இல்லை!

ஊரெல்லாம் சுற்றி காளைகள் வாங்குவான், அவைகளை பராமரிக்கும் பணியைத் தானே சுமப்பான்! மயிலைக்காளைப்பூட்டி அவன் ஏர் ஓட்டினாலும், ஸ்டீரிங்கைப் பிடித்து கார் ஓட்டினாலும், ஊரே திரண்டு பார்க்கும், அவன் திறமை கண்டு மெச்சும்! முல்லை கிராமத்து 'விஞ்ஞானி' என்று பெயரெடுத்தான். முல்லைகுடும்பத்தின் 'வீரதீர பராக்கிரம சிங்கம்' எனப் பாராட்டுரைப் பெற்றான், மண்ணிலே 'பொன்' செய்தான். அண்ணன்மார்களின் புன்னகையையே பரிசாகப் பெற்றான், அதுவே தன் வாழ்வின் பேரின்பம் எனக் கொண்டான்.

அண்ணன்மார்களின் பொது வாழ்விற்கு உறுதுணையாக நின்றான். அவர்களின் நாட்டுப்பணிக்கு ஊறு ஏதும் ஏற்படாவண்ணம் காத்து நின்றான், அவன் குடும்பச் சேவை ஏற்று, அண்ணன் மார்களை நாட்டுச் சேவை செய்ய அர்ப்பணித்தான்!

'நான் இருக்கும்போது பயம் என்ற கவலை ஏன்?' என்று அவன் விழிகள் பேசும்! 'தம்பியுடையான், படைக்கஞ்சான்' என்று அவனது அண்ணன்மார்களின் மார்பு கர்வத்தால் விம்மும்.

திடீரென்று ஒருநாய் கொண்டு வந்தான், 'எல்லாவிதமான நாய்களையும் வளர்த்தாகிவிட்டது, இந் நாயை ராஜபாளையத்திலிருந்து கொண்டு வந்திருக்கிறேன்—— நல்ல வேட்டைநாய்—நுட்பமான அறிவு' என்று அவன் அண்ணன்மார்களிடம் பெருமைப் பட்டுக்கொண்டான்! 'ராஜா' என்று செல்லப் பெயர் சூட்டினான். அவன் குளிக்கச் சென்றால் இரு 'எடுபிடிகள்' செல்வர் அவனைக் குளிப்பாட்ட! ஆனால் நாயை அவன்தான் குளிப்பாட்டுவான். அவன் விலையுயர்ந்த சோப் போட்டுக் குளித்ததில்லை, ஆனால் நாயை விலையுயர்ந்த சோப் இல்லாமல் குளிப்பாட்டியதில்லை!

டெட்டால் போட்டு அவன் குளித்ததில்லை, ஆனால் நாயை டெட்டால் இல்லாமல் குளிப்பாட்டியதில்லை' 'காட்லிவர் ஆயில்' 'விட்டமின்—பி— காம்பிலெக்ஸ்' அவன் உண்டதில்லை. ஆனால் நாள்தவராமல் அவைகளை நாய்க்குக் கொடுக்கத் தவறியதில்லை! ஊட்டி ஊட்டி வளர்த்தான், பெட்டி பெட்டியாக பிஸ்கட் கொடுத்து வளர்த்தான். உண்டு கொழுத்த அந்த நாயை எல்லோரிடமும் காட்டி காட்டிப் பெருமைப்பட்டான். ''ஈடுண்டோ இணையுண்டோ என் நாய்க்கு'' என்று பூரிப்புப் பெற்றான்! அவன் எங்கு சென்றாலும், நாயும் அவனைப் பின் தொடரும், நாய் இல்லாமல் அவன் எங்கும் சென்றதில்லை! அதனுடன் விளையாடுவதே அவனுக்குப் பொழுது போக்கு!

ஒருநாள். கொழுகொழு என்று வளர்ந்த அந்த நாய் அவன் கையைக் கடித்துவிட்டது! துடித்தான். ஆனால் கேட்போருக்கு 'விளையாட்டாகக் கடித்துவிட்டது' என்று பரிந்து பேசினான். அவன் வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று திரும்பி வருவதற்குள், அவனின் பெரிய அண்ணன் அந்நாயை சுட்டுக் கொன்று விட்டார்.

'வாத்துப் போல் வெண்மை—அன்னத்தூவிப்போல் மென்மை' இத்தகைய சிறப்புப் பெற்ற நாயை மூத்தவர் சுட்டுக்கொன்றுவிட்டாரே என்று அவனது சின்ன அண்ணனிடம் குறைப் பட்டுக்கொண்டான்! அது மாண்டுவிட்டது என்று மனமுடைந்தான்!

திடீரென்று ஜுரம். அவனைத் தீண்டியது. அண்ணன்மார்கள் வெளியூரில். மூத்தவர் சென்னையில், சின்னவர் திருவாரூரில்! அன்னை அலறியடித்துக்கொண்டு அவனை வேலூருக்கு எடுத்துச் சென்றாள்! தீராத வியாதியெல்லாம் தீரும் வைத்தியசாலையல்லவா அது! பார்மெச்சும் வைத்தியசாலையாயிற்றே! செய்தியறிந்து அண்ணன் மார்கள் ஓடோடியும் வந்தார்கள். 'நான் குணமடைந்து விடுவேன், ஏன் இப்படி கவலைப் படுகிறீர்கள்?'' என்று அவர்களைக் கேட்டான், அவர்களின் விழிகளிலே வழியும் நீரைக்கண்டு!

பார்க்காத டாக்டர்கள் இல்லை, செய்யாத வைத்தியமில்லை. ஆனால் அவனோ யாரும் தேடி கண்டுபிடிக்க முடியாத இடத்திற்கு ஓடிவிட்டான். கண்மூடி திறப்பதற்குள் விண்ணோக்கி ஓடிவிட்டான். சுமந்து பெற்றெடுத்த மாதாவை—பாசத்தையெல்லாம் அவன்மேல் பொழிந்து கொண்டிருந்த அண்ணன்மார்களை 'தம்பி, தம்பி' என்று அழுமும், முகமும் மலர அழைத்த அண்ணியை, 'சித்தப்பா சித்தப்பா' என்று அவன்மேல் உயிரையே வைத்துக் கொண்டிருந்த கண்மணிகளை, மறந்து எங்கேயோ ஓடிவிட்டான்...தான் வளர்த்த நாய் போன இடத்திற்கேப் போய்விட்டான்......குடும்பத்தை எல்லாம் பிரிந்து, நாயைப் பின் தொடர்ந்துவிட்டான்...

வாழ்ந்த காலத்தில் அவன் குடும்பத்தாரை, அவன் அழச் செய்ததில்லை. அதற்கு வட்டியும் முதலுமாக அழ வைத்துப்போய் விட்டான்!

சாயும் உடலா அது, சாய்ந்து விட்டது!

மாயும் வயதா அது, மாய்ந்து விட்டான்!

அன்னை அவனை மணக்கோலத்தில் காண ஊரிலுள்ள தெய்வத்தையெல்லாம் தொழுதுக்கொண்டிருந்தார். அவனோ பிணக்கோலத்தில் காட்சி தந்தான். தை மாதத்தில் அவனுக்கு 'ஜாம் ஜாம் என்று திருமணம் நடத்த திட்டமிட்டிருந்தார் அவனது மூத்த அண்ணன். ஆனால் அவனின் பிணத்தைத்தான் அவர் கண்டார்! அவனைச் சாவுக் கரங்கள் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் சின்ன அண்ணன் அவனுடைய திருமணத்தைக் குறித்து தனது தலைவர்களுடன் பேசிச்கொண்டிதான். விதவிதமான மணஓலை அச்சடிக்க அந்தப் பாழும் உள்ளம் திட்டமிட்டிருந்தது! காலம் அவனின் மரண ஓலையைத்தான் அச்சடிக்கச்செய்துவிட்டது.

மண்ணிலே 'பொன்'செயதான் அந்த மண்ணுக்கே இரையாகி விட்டான்! தன் எமனை தானே பாலூட்டி சீராட்டி வளர்த்தான், அதற்குத் தன்னைத்தானே அர்ப்பணித்துக்கொண்டான்! வேட்டை நாய் கொண்டுவந்தான், அது அவனையே வேட்டையாடிவிட்டது!

துயரக் கடலில் தத்தளிக்கும் அக்குடும்பத்தார், தங்களது சந்தியாருச்கு விட்டுச் செல்லும் ஒரே சாசனம் இதுதான்!

''நாய்க்கு நன்றியில்லை, அதை வளர்க்காதீர்! ஊட்டி ஊட்டி வள்ர்த்தாலும், அது உயிரையே குடித்துவிடும்''

ஃ

காலம் வருமா ?

கோழி கூவியதும், மேழி யெடுத்து வயற்காட்டிற்குப்போய் விட்டால், தாலிகட்டிய தாரமானாலும், தாயானாலும் தங்கத்தை யொத்த சேயானாலும் வந்து சேதி சொன்னால்' நின்று பதிலுரைக்க நேரமின்றி கண் சாடை காட்டிவிட்டு தன் எண்ணத்தை யெல்லாம் ஏர்முன் வைத்து, சீர்முன் செய்து,பார்முன் நீண்டு கிடக்கும் பசிப்பிணியைப் போக்குவது எப்படி என்ற கேள் விக் குறியைத் தூக்கி நிறுத்தி ஆக்க வேலையில் அல்லும் பகலும் பாடுபட்டு, சாய்ந்து கிடக்கும் சமுதாய மக்களைக் காப்பதற்காக ஓய்வு உறக்கமின்றி, தன்னை-தன்

சி. கணேசன்

உருவைக் கெடுத்து-தாய் தன் சேயைவளர்ப்பதுபோல்மண்ணைக் கிளறி, பொன்னையெடுத்து, நாட்டுக்குக் கொடுத்த மக்கள் உழவர்கள்.

அவர்கள் தான் இந்தச் சமுதாயத்தின் கண்கண்ட கடவுள்கள், தங்கச் சுரங்கத்தில் வேலைபார்ப்பவன்-தங்கத்தைத் தொட்டுத் தான் பார்க்க முடியுமே தவிர தங்கத்தைஎடுத்துகொண்டு போக முடியாது- அதுபோல் உழைத்தவன் முற்களில் நடந்தவன்-தினம் கற்களில் துயின்றெழுந்தவன்- நல்ல நெற்களைத் தந்த மக்கள்-நிம்மதியாய் வாழ முடியவில்லை ஏன ?

காட்டையும் மேட்டையும் கனி குலுங்கும்மரமாக்கி, நாட்டையும் வீட்டையும் காத்து-நலம் என்ற விளக்கேற்றி வலம்என்ற தேரேறி வர வைத்தவ்ன். மரத்தையும்



கனியையும் கொடுத்தானே தவிர அதை அவன் பறித்துதுண்பதற்கு நாம் சுதந்திரம் கொடுக்கவில்லை. தானாக ஏறிப் பறித்துக் கொண்டால் தங்களுக்கெல்லாம் கனி கிடைக்காது என்ற தப்புக் கணக்குப் போட்டு அரசும் அதிகாரம் பெற்றவர்களும் அவனது உரிமைகளைப் பறித்துக் கொண்டு விட்டார்கள். மரம் ஏறி கனி பெற முடியாமல் கால்களை முடமாக்கி விட்டார்கள்! இந்தப் பரிதாப நிலை இன்னும் நீடிக்கவேண்டுமா?

"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால் உழன்றும் உழவே தலை" என்று வள்ளுவன் சொல்லி விட்டான் என வாய்ப்பறைஅடித்தால் மட்டும் போதாது. வள்ளுவன் காலத்து அரசியல் கண்டவர்களா இன்று நாடாள்கிறார்கள். ஏழை எளியவர்களின் கண்ணீர்த் துளிகள் தான்-மணி முடிகள் என்பதை அவன் காலம் உணர்ந்தது. ஆனால் இன்றோ-ஆலை அதிபர்களும்-சோலைச் சொந்தக்காரர்களும் தானே சுகபோக வாழ்வு நடத்துகிறார்கள். எங்கே ஏழைகள் வாழ்வது...

இந்த நிலைமாற வேண்டும், மாற்றியாக வேண்டும். உழைப்பவன் உண்ண வேண்டும், உழைப்பவன் வாழவேண்டும், அவர்கள் நலத்திற்கு அரசு உதவுவதாகச் சொல்லிச் சொல்லி காலம் கடத்தாது அரசு உதவ-நாம் முரசு கொட்ட வேண்டும்.

உழவன் வாழ்ந்தால் தான் உலகம் வாழும். அவன் சிரித்தால் தான் நெற் கதிர்கள் மணி மணியாய் விளைவு கொழிக்கும். அவன் கரங்கள் வளமாக இருந்தால்தான் வரப்புக்களில் வளமிகக நீரோடும். அவன் உள்ளம் பசுமையாக இருந்தால் தான் பயிர்கள் பசுமையாக வளரும்.

சொத்து சுகங்களை மாடு மனைகளை வீடு நிலங்களை, நகை நட்டுக்களை சதா அடகு வாங்கி-வாங்கிப் பழக்கப்பட்ட நமது கரங்களும்-அரசும் அவர்களிடம் உள்ள புன் சிரிப்பை யாவது அடகு வாங்காமல் இருப்போமாக.

உழைப்பவனின் முகத்தில் தேங்கிநிற்கின்ற வியர்வைத் துளி முத்துக்களில் தான் நான் ஆண்டவனைக் காண்கிறேன் என்றார் கவி டாகூர். அது உண்மையானால் அவர்கள் கடவுளாக வேண்டாம், மனிதனாக வாழட்டும். நாள் தோறும் சிரிப்பைச் சிந்தட்டும், இதை கொடுக்கின்ற காண்கின்ற காலம் வருமா?

—*∘∘*—



'முன்னாள்' பாதுகாப்பு மந்திரியாகிவிட்ட வி. கே. கே. மேனன் பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார் !!

அறப்போர்

அடுத்த இதழ் முதல்
பல புதிய அம்சங்கள்
பழைய பெருமையுடன்

பில்பாக்கியுள்ள ஏஜண்டுகள் ரத்து செய்யப்பட்டு புது ஏஜண்டுகள் நியமனம் செய்யப்படுவர்.

பத்திரிகைவராத ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை.

அறப்போர் சென்னை 18

"பழைய துணி இருக்குங்களா? பாத்திரம் தரேன்..."

"மொதல்லே உங்கிட்டே யிருக்கிற பழைய துணிரைக் கொடு..."

அவைகள் !

1. திருப்பிப் பாருங்கள்: ஸ்கூட்டர் சுந்தரி வேகமாகப் பறக்கிருள்.

2. திருப்பிப் பாருங்கள்: பெண்களின் ஆயுதத்தைக் குறிப்பிடுகிருர் ஓவியர்!

3. நேராக உட்கார்ந்து இளம் வித்வான் 'கடம்' வாசிக்கிருர்!!

4. முதலாளியாக வழி!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ணேயில் சொன்ஞன் கர்ணபூபதி.

மாப்பிள்ளேயின் பெரிய மனுஷத் தன்மையைக் கண்டு பூரித்துப் போஞள், அம்பிகா! மற்றவரும் அப்படியே நினைத்தனர்!!

போலீஸ்வானில் ஏறிஞன், புன்சிரிப்போடு கண்ணப்பன். சீதா, 'தியாகி' என்று தன் வாய்க்குள் முணு முணுத்தபடி கைகளை ஆட்டிஞன்! கைகளை ஆட்டியபடியே கண்ணப்பன் புறப்பட்ட வானுக்குள் இருந்தாள்!!

* * *

"இனிமே அம்பிகா என்னங்க செய்ய முடியும்? நான் வெளியே போனதும், எப்படியும் என் நண்பனின் தயவிலே நானும் ஒரு பெரிய புள்ளியாஞலும் ஆயிடுவேன்" என்று சிரித்தபடியே சட்டமன்றத் தனிக்கைக் குழுவோடு சிறைகளைப் பார்வையிடச் சென்றிருந்த என்னிடம் சொன்ஞன் அந்தக் கைதி.

அவனிடம் இன்னும் பேச வேண்டும் போலிருந்தது, ஏனைய உறுப்பினர்கள் வந்துவிட்டதால் அவனுக்கு இரண்டு வணக்கம் செலுத்திவிட்டுக் கிளம்பினேன்.

பொங்கிடுமோ பொங்கல்!

தூத்துக்குடி நா. புகழேந்தி

பொன்னங் கதிர்விரியும் பொங்கற் புதுநாளில்
தென்னன் புகழ்பாடும் திருநாட்டுப் பெருமக்கள்

வெண்ணெய் நிறத்தரிசி வெல்லமிஞ்சி ஏலமுடன்
பொன்னிறத்தில் பொங்கலிட்டு புத்தம்புது இலையிலிட்டு

உண்ணுதற்கு முடிந்திடுமோ? உதிர்கின்ற கண்ணீரை
எண்ணுதற்கு இயன்றிடுமோ? இதயத்தீர், சிந்திப்பீர்!

வெல்லமுதல் உப்புவரை விலைஉயர் கொண்டதிஞல்
தொல்லையன்றி வேறின்பம் தோன்றிடுமோ? பொங்கிடுமோ?

அடுப்பேற்றும் பானைக்கும் அரிசிக்கும் விறகுக்கும்
கொடுக்கின்ற விலைகண்டு குமுருதோ? உளந்தான்?

நூலாடை வாங்குதற்கு நுழையுமுன் கடைவாயில்
மேலேறத் தடைபோடும் மின்வெட்டும் விலைபட்டில்!

குடியேற வீடின்றி குமுறுகின்ற ஏழைக்கு
விடிவின்றேல் பொங்கல்நாள் வெறுநாளாம் மறுப்பீரோ?

தன்ஞட்சி பிறர்கையில் சாய்கின்ருர் இந்நாட்டார்
இன்ஞளைப் பொங்கலென இயம்பிடவோ? கூறிடுவீர்?

எல்லையிலே சீனர்கள் இழைக்கின்ற கொடுமைக்கு
நல்லதோர் முடிவின்றேல், நமக்குமா இப்பொங்கல்?

மின்வெட்டும் போர்வாளாய் மிளிர்கின்ற இளைஞர்காள்
பொன்ஞட்டை மீட்காமுன் பொங்கிடுமோ? பொங்கல்தான்.

பிப்ரவரி 1 வெளி வருகிறது!
அண்ணுவின் அணிவகுப்பில்
ஆற்றல் மிகுந்த படைக்கலன்!
தென்னகம்
வார இதழ்
ஆசிரியர்: K.A. மதியழகன். M.L.A.
தனி இதழ் 16 காசு.
ஆண்டு சந்தா 8 ரூ.
* எல்லா இடங்களுக்கும் முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.
'தென்னகம்' 126. மவுண்ட் ரோடு, சென்னை-6.

பிரதி மாதமும் 6,7,8 தேதிகளில் சென்னை விஜயம்

சென்னையில் தங்குமிடம்:

எழும்பூர் விக்டோரியா ஓட்டல்

வாலிபர்களுக்கு அறிவிப்பு

என் அருமை நண்பர்களே!

வாலிப பருவத்தில் சிலர், துர் நடத்தையுள்ளவர்களின் சேர்க்கையால் பலவித பழக்கங்களைக் கற்றுக்கொண்டு தங்கள் திரேகத்திலுள்ள ஜீவ சக்தியை அடிக்கடி இழக்கச் செய்து, நாளடைவில் திரேகம் இளைத்து கண்களின் பார்வை குறைந்து, உஷ்ணம் அதிகமாகி சொற்பனத்தில், சிறுநீரில் சக்தியை இழப்பது, திரேகத்தில் வலி, இடுப்புவலி, ஞாபகமறதி, தைரியக்குறைவு இவைகள் ஏற்பட்டு மற்றவர்களிடமோ, பெற்றோர்களிடமோ சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு, மணவாழ்க்கையை வெறுத்து மனதில் பற்பல எண்ணங்களை ஏற்படுத்தி அவதியுற்றுவருகிறார்கள். இவ்வியாதியை ஒன்றிரண்டு மாதங்களில் குணமாக்க எந்த வைத்தியத்தாலும் முடியாது. மருந்துகளை தொடர்ந்து சாப்பிட்டுதான் குணம்பெறவேண்டும்.

உங்களுக்கு பூர்ண குணம் ஏற்படவேண்டுமானால், எங்கள் பிரக்யாதிப்பெற்ற கீழ்க்கண்ட அற்புதமான மருந்துகளை மாதம் 1 முறையாகத் தருவித்து சாப்பிட்டு குணம் தெரிந்து, தொடர்ந்து சாப்பிட்டு பூர்ண குணம் பெறலாம்.

(ஒப்பம்) டாக்டர் எஸ்-ஆர்-சிவராஜ் ஆர்-எம்-பி

1 இராஜாமிருதம் [லேகியம்] 2 இராஜ்பில்ஸ் [மாத்திரை]
3 தாமரை தைலம் (ஸ்நான தைலம்)
4 லேபனத்தைலம் (மேல்பூச்சு மருந்து) 1 மாதத்தில் இவை நான்கும் உபயோகப்படுத்தவேண்டும். 1 மாதத்துக்கு வேண்டிய 4 மருந்துகளும்;—
(தங்க பஸ்பம்) கலந்த லேகியமும் மற்ற மருந்துகளும் சேர்ந்து ரூ. 33—00, (கால்சியம்) கலந்தது ரூ 23—00
(போஸ்டேஜ் ரூ 2—50 தனி)

விவரங்களுக்கு:—

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
சிவதாபுரம் அஞ்சல் சேலம்-2

பவரும்! இராம ; அரங்கண்ணல், ;-ஏ. டாக்டர் சர் சி. பி. ராமசாமிரோடு, அபிராமபுரம், சென்னை 18,
அச்சிட்டோர் எம். பி. ... யமூர்த்தி முல்லை அச்சகம் 8-40 ; மவுண்ட்ரோடு சென்னை-6